Upāyaniṭṭai Veṇbā	2247
Uṟaiyūr	2216, 2217
Urdhvapuṇḍraviṣayakapramāṇa Vacanāni.	2094
Uttaragītācarama Ślōkavyākhyā ..	2098
Uttararāma Caritanāṭakam ..	2102
Uyyavandadēvanāyanār	2227, 2244, 2267

V

Vacana bhāgavata (Telugu) ..	2107
Vādhūla Vēṅkaṭārya Stuti ..	2072
Vādibhīkara Kṛṣṇārya	2106
Vaidyamuṟai	2285
Vaidyanātha Dēśikar	2208, 2230
Vairāgyadīpam	2228
Vairāgyaśatakam	2228, 2259

	PAGE
Vairāgya Śatakam with Urai ..	2191
Vaiṣṇavōtsava Praśamsā	2113
Vaittiyanūl (Prose)	1977, 1984
Vākkiya Guruparamparā Vivaraṇam.	2020
Vakuḷābharaṇar	2071
Vākyatrayavivaraṇam	2277, 2285
Vākyatrayavivaraṇa vākyadīpikā ..	2275, 2285
Vāḻittirunāmam	2058, 2071, 2077, 2091, 2092, 2096
Vaḷḷiyammaināṭakam	2230
Vānamāmalai Ayyaṅkār ..	2149
Vaṅgīpurattāycci	2104
Vānmīkar maṇikkaḍaikkayiṟṟuccūttiram Muppadu.	1963
Vaṇṇapparimaḷam	1985 to 1987
Varadadēśikan	2078, 2105
Varadarājāṣṭakam	2064
Varadārya	2094, 2102
Varāhacaramaślōkavyākhyānam ..	2102
Varāhamihirar	2294
Varāhanagar	2294
Varāhapurāṇam	2103
Vārāhimālai	2138
Varavaramuni	2087, 2106
Varavaramunimaṅgaḷāśāsanam ..	2106
Varavaramuniprapatti	2106
Varavaramunivaryaśatakaviyākkiyānam.	2284
Vārtāmālai	2027
Vēdācārya	2006
Vēdānta cūḷāmaṇi	2214, 2252, 2253
Vēdāntacūḷāmaṇi Uraiccurukkam.	2252, 2257
Vēdāntadēśika	1948, 2051, 2078, 2102, 2271 to 2273, 2277, 2278.
Vēdāntadēśikavai bhavaprakāśikā.	1950
Vēdāntavuraippaḍikkaṭṭaḷai ..	2256
Vēdāraṇyam	2293
Vēdārtha Saṅgraha	2086
Vēdavyāsabhaṭṭa	2007
Vēlappappaṇḍārapperiyār ..	2155, 2156
Vēṅkaṭācalaguru	2129, 2130
Vēṅkaṭācalakīrttanam	2129
Vēṇkaṭācāryar	2009, 2101
Vēṅkaṭaraṅgārya	2085
Vēṅkaṭēsamaṅgalāśāsanam ..	2118
Vēṅkaṭeśaprapatti	2118
Vēṅkaṭeśastuti	2118
Vēṅkaṭeśa Suprabhātam ..	2118

	PAGE
Venrimālaikkavirāyar	2161, 2162
Vidyāraṇya	2178
Vilakṣaṇātmaviśiṣṭa bhagavatsvarū-panirūpaṇam.	2373, 2286
Villiputtūrār	2170
Villiputtūrār bhāratam	2170
Vināveṇbā	2243
Vināveṇbā with Commentary ..	2226, 2234
Vināyaka bhārati	2229
Vīrabāhu	2256
Vīra bāhupiḷḷai	2170, 2171
Vīrabhōgavasantarāyapatrikai ..	2294
Vīrai Āḷavantār	2270, 2184
Vīramāmunivar	2186, 2290
Vīraśaivāgamam	2283
Vīra Śaivasiddhāntam (*Vacanam*).	2247
Viṣṇusahasranāmam	1942
Viṣṇusahasranāmastōtra ..	1949, 1950
Viṣuvaruḍappañcāṅgam (Srīraṅgam). ..	
Viṣvaksēnasamhitai	1952, 1958
Vizāgapaṭam	1939, 1940 to 1942, 1944 to 1947 1950, 1953 to 1956.

	PAGE
Vṛddhagiripurāṇam	2185
Vyākaraṇamahā bhāṣyam ..	2078
Yādavācalasuprabhātam ..	2116
Yādṛccikappaḍi	2079
Yadugiriśadaśakam	2117
Yajñōpavītavidhi	2069
Yāmunācārya	1947
Yāpparuṅkalakkārikai	2206, 2209
Yāpparuṅkalakkārikai with guṇa-sāgarar Urai.	2133, 2176
Yatīndrapravaṇa prabhāvam ..	2011, 2018
Yatīndrapravaṇaprabhāvasaṅgra-ham.	2006
Yatirāja maṅgaḷāśāsanam ..	2115
Yatirājavimṣati	1959
Yatirājavimśativiyākkiyānam ..	2010
Yatirājar	2070
Yathōktakāri Stōtram	2117
Yōgarahasyam	1959
Yuvanāma samvatsara Pañcāṅgam.	2050

A TRIENNIAL CATALOGUE OF MANUSCRIPTS.

PART II—TAMIL.

1934-1935 to 1936-1937, 1937-38 to 1939-40 and 1940-41 to 1942-43. Three Trienniums.

Volume VIII.

R. No. 1056.

Palm-leaf. 18¼ × 1⅝ inches. Foll. 97. Lines, 7 on a page. Tamil and Grantha. Injured. Old.

Presented in 1935–36. By Śrī K. C. Gōpālācāryar, Subordinate Judge of Vizagapatam.

பாகவதம் த்விதீய ஸ்கந்தம் (வசனம்).
BHĀGAVATAM DVITĪYASKANDHAM (PROSE).

Similar to the work described under No. D. 431.

Contains Adhyāyas 1-10 complete.

By Śrīnivāsācāryar of Kariccaṅgāl.

Beginning :

வந்தே வந்தாரு-மந்தாரம் இந்திராநந்தகம் ஹரிம் |
யத்த்வதா தேவா-ஸாத்யாநா த்வாசீஸாயதிம் நவ: ||
ஸம்ப்ரயாம்ஸி கமோதக-ஸங்கல்பாவாத்ய: பாதோநிதீர
நிகத்ராநந்தகமோ யத்ம்ஸி ப்ரவர்த்தக ஸ்ரீராமதேந்த்ராத்யம் |
யஸ்யாமோகஜாதயோ ஜயந்தியமக்ஷாம் வஸாந்தீக்ஷணாக்
யமேந்த்ர வ்யாஸராஸ்ய ஸஹஜாமெய்யப்ராசெவ்யாஸ ||
த்விதீயேத்ர தசாத்யாயே ஸ்ரீபாகவதகோசர: |
உக்தம் லக்ஷணாத்த்வயம் ஸம்க்ஷேபேணாவதார்யதே ||

இந்த ஸ்ரீபாகவத த்விதீயஸ்கந்தத்திலே பத்து அத்தியாயத்திலேயும் ஸ்ரீபாகவதத்திலுடைய ஸ்வரூபகதநமும் அதனுடைய லக்ஷணமும் சொல்லப்படுகின்றன. அந்தப் பத்து அத்தியாயத்திலே ப்ரதமாத்யாயத்திலே பகவானுடைய நாமஸங்கீர்த்தனங்களாலேயும் பகவத்தர்மத்தைக்கேட்கிறதினாலேயும் ஸ்ரீபகவானுடைய ஸ்தூலமாயிருக்கப்பட்ட ரூபத்தினுடைய த்யானப்ரகாரம் சொல்லப்படுகிறது.

* * * * * *

End :

பாஞ்சஜந்யத்தினுடைய சரிதங்கள் இ[த](வை)களெல்லாம் உத்தரக்ர த்ருதீயஸ்கந்தத்திலே சொல்லுகிறோமென்று இப்படிச் சொல்லா நிற்கிற ஸூதபௌராணிகரைப் பார்த்து ஶௌநக மஹர்ஷி ப்ரஶ்நம் பண்ணுகிறார். ஶ்ரீஶௌநக :—கேளீர் ஸூதரே! அந்தப் பாகவதஶ்ரேஷ்டரான விதுரர் ஸகல பந்துக்களையும் விட்டு விட்டு தீர்த்தயாத்ரையாய்ப் போனாரென்றும், போனவிடத்திலே மைத்ரேயருக்கும் விதுரர்க்கும் உத்தரப்ரத்யுத்தரங்கள் உண்டாயின வென்றும் சொன்னீரே அவை என்ன ? * * * *

Colophon :

இதி ஶ்ரீபாகவதே மஹாபுராணே த்ருதீயஸ்கந்தே ப்ரதமோऽத்யாய:.

(கு - பு.)—

இந்நூல் வடமொழி ஸ்ரீ பாகவதத்துக்குப் பொழிப்புரையாக மணி ப்ரவாள நடையிலே கரிச்சங்கால் ஸ்ரீநிவாஸாசாரியரால் இயற்றப்பெற்ற தாகும். இப்பிரதியில் இரண்டாம் ஸ்கந்தம் பத்து அத்தியாயங்கள் முற்றும் உள. எழுத்துப்பிழைகளுடன் உளது. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்திருக்கின்றன.

R. No. 1057.

Palm-leaf. 17 × 1½ inches. Foll. 69. Lines, 10 on a page. Tamil and Grantha. Much injured. Old.

Presented in 1935–36. By Śrī K. C. Gōpālācāryar, Subordinate Judge of Vizagapatam.

பாகவதம்—த்ருதீய ஸ்கந்தம் (வசனம்.)

BHĀGAVATAM—TṚTĪYASKANDHAM (PROSE.)

Same work as the above.

Incomplete.

Contains Adhyāyas 1—15 only.

Beginning :

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:.

இதுவரைக்கும் இரண்டு ஸ்கந்தங்களால் ஶ்ரீமந்நாராயண ஹிரண்யகர்ப்பநாநாவதாரரூபியா ஸம்க்ஷேபமாக அவதரித்த ஶ்ரீபாகவத கதையை பரீக்ஷித்துக்கு உபதேஶம் செய்துவந்த ஶுகயோகி இந்த மூன்றாம் ஸ்கந்தந்தொடங்கி ஶ்ரீஹரிசேஷ

ஸூத ஶௌநகாஸாதிமுநிவரர்களுக்கு ஸூதர் சொல்லுகிறார். ப்ராமணர்களாகிய வியாஸ ஸூதர்களுடைய விஷயமாக ப்ரஶ்நம் பண்ணிந ஸ்ரீ பாகவதத்தைப் பரீக்ஷித்துக்குச் சொல்லத்தொடங்கி கதாஸந்தர்ப்பத்துக்காக இரண்டு ஶ்லோகங்களால் ஒரு உதிஹாஸத்தைச் சொன்னாரென்று ப்ரஸித்தமான வாஸிகளுக்குக் கதைசொல்லிவந்த ஸூதபௌராணிகர் அந்த உதிஹாஸத்தாலே அறியப்படுகிற ஸூதவிதுர ஸம்வாதத்தையும் சொல்லுகிறார். இதில் முதல் அத்யாயத்தில் துர்யோதநனுடைய தன் ஸ்வஜநங்களை த்யஜித்து வநவாஸம் பண்ணின விதுரருக்கும் உத்தவர்க்கும் ஸம்வாதம் நடந்ததென்று ஸூதர் வர்ணிக்கப்படுகிறது.

End :

அந்த அந்த ஜன்மங்கள் வரக்கடவன. (உசு)

இப்பால் இப்போது நாங்கள் க்ருதார்த்தர்களானோம் என்கிறார்கள் :—ஓ விஶ்வமூர்த்தி ஸர்வஜ்ஞனே ! பகவானே ! எந்த . . . மங்கள மூர்த்தியை ப்ரகாஶஞ் செய்தருளிற்றோ? இதனாலே எங்கள் கண்கள் ஆனந்தத்தை மிகவும் அடைந்தவைகள்போல் ஆயிற்று. [யாதொரு] (எந்த) ஸாதனமற்றவன் ஜிதேந்த்ரியனுக்கு ப்ரகாஶிக்கிறது இல்லையோ? எங்களுக்கு ப்ரத்யக்ஷமானீரா ? அந்த ஶுத்தமூர்த்தியைக்குறித்து இந்த வந்தனத்தைச் செய்கிறோம். (உஎ)

Colophon :

[இவை] ஸ்ரீ மஹாபாகவதத்தில் மூன்றும் ஸ்கந்தத்திலே பதினைந்தாம் அத்தியாய கதை ஸம்பூர்ணம்.

(கு - பு.)—

இந்நூல் முன் நம்பர் பிரதியில் வந்த நூலேயாகும். இப்பிரதியில் மூன்றும் ஸ்கந்தம் (1—15) ஒன்று முதல் பதினைந்தாம் அத்தியாயங்கள்வரைக்குமே உளது. எழுத்துப்பிழைகள் மிகவாகவுள. ஏடுகளும் மிகவாகச் சிதலுற்று இருக்கின்றன.

R. No. 1058.

Śrītālam. 19 6/16 × 1¾ inches. Foll. 54. Lines, 11 and 12 on a page. Tamil and Grantha. Injured. Old.

Presented in 1935–36. By Śrī K. C. Gōpālācāryar, Subordinate Judge of Vizagapatam.

பாகவதம் த்ருதீய ஸ்கந்தம் (வசனம்).
BHĀGAVATAM TṚTĪYASKANDHAM (PROSE).

Same work as the above.

Incomplete.

Contains Adhyāyas 1—15 only.

(கு - பு.)—

இந்நூல் முன் நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலும் அதனளவேயுளது. ஆனால் ஷெ பிரதியைக்காட்டிலும் இப்பிரதி நன்ருக எழுதப்பட்டிருக்கிறது. ஏடுகள் அங்கங்கே ஒரு சிறிது சிதலுற்று இருக்கின்றன.

R. No. 1059.

Śrītālam. 19½ × 1¼ inches. Foll. 13. Lines, 16 on a page. Tamil and Grantha. Injured. Old.

Presented in 1935–36. By Śrī K. C. Gōpālācāryar, Subordinate Judge of Vizagapatam.

பாகவதம் த்ருதீய ஸ்கந்தம் (வசனம்).

BHĀGAVATAM TṚTĪYASKANDHAM (PROSE).

Same work as the above.

Incomplete.

Contains Adhyāyas 1—5 only.

(கு - பு.)—

இந்நூல் முன் நம்பர் பிரதியிலே வந்துள்ளதேயாம். இப்பிரதியில் ஒன்று முதல் ஐந்து அத்தியாயங்கள் வரையிலுமே பூர்ணமாயுளது. இப்பிரதியில் முன்பிரதிகளிலே முதலில் "ஹிரண்யமஹா நாரதவரதயா" என்றதாய்த் தொடங்கும் தொடர்மொழியின் அர்த்தத்தைக் "கமலாஸனனுக்கு ஸ்ரீமந் நாராயணன் நாலு ஸ்லோகத்தால் ஸங்கிரகித்து உபதேசித்த ஸ்ரீ பாகவதத்தை வசனமாநனும்" என்றதாகத்தொடங்கி ஒரு தொடர் மொழியால் விளக்குவித்து இருக்கிறது. எழுத்துப் பிழைகள் உள. ஏடுகள் சிதைந்திருக்கின்றன. பின்னர்ஓரேட்டில் 'விஷ்ணு ஸஹஸ்ரநாம' ஸ்லோகங்கள் சில எழுதப்பெற்றிருக்கின்றன.

R. No. 1060.

Śrītālam. 19 14/16 × 1¼ inches. Foll. 104. Lines, 7–9 on a page. Tamil and Grantha. Much injured. Old.

Presented in 1935–36. By Śrī K. C. Gōpālācāryar, Subordinate Judge of Vizagapatam.

பாகவதம் தசமஸ்கந்தம் (வசனம்).

BHĀGAVATAM DAŚAMASKANDHAM (PROSE.)

Same work as the above.

Incomplete.

Contains Adhyāyas 55—70 complete, and 54 and 71 incomplete.

Beginning :

என்கிற கதை சொல்லப்படுகிறது. ஸ்ரீ ஶுக: :—கேளும் மஹாராஜாவே! எப்போது ஸ்ரீ கிருஷ்ணன் ஸ்ரீ ருக்மிணியை எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கச் செய்தே பலாத்காரமாய்த் தூக்கிக்கொண்டு போய்விட்டாரோ? அப்போது துஷ்ட ராஜாக்கள் எல்லோரும் . . . . ருமாய் ஸ்ரீ கிருஷ்ணனோடே யுத்தம் பண்ணவேண்டுமென்று நிச்சயம்பண்ணிக்கொண்டு எல்லாரும் தேரில் ஏறிக்கொண்டு கவசமணிந்து தங்கள் தங்கள் ஸேனைகளை யழைத்துக்கொண்டு தனுஸ்ஸுக்களைக் கைகளிலே எடுத்துப் பகு கோபத்தோடே கூடப் பின்னோடே கிருஷ்ணனைத் தொடர்ந்து கொண்டு ஓடினார்கள். அவர்களை ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஸேனை யிலே யிருக்கிற * * * * *

End :

ஸ்ரீ ஶுக :—இப்படிச் சொல்லவே நாரதருடைய வார்த்தையைக் கேட்டு ஸகல யாதவர்களும் ஜராஸந்தனை ஸம்ஹாரம் பண்ணவேண்டுமென்று ஆசைப்பட, இப்படியிருக்க, ஸந்தோஷப் படுத்திக்கொண்டு மந்திரியாய் பிருத்தியனுமிருக்கிற உத்தவனைப் பார்த்து ஒருவார்த்தை சொன்னார் ஸ்ரீ பகவான். வாராய் உத்தவனே! நீ நமக்கு உத்தமனானபந்து. எனக்கு ஸாக்ஷாச்சக்ஷுஸ்ஸாயிருக்கிறவன். இப்படிப்பட்டவன் ஆகையாலே ராஜதூதக வாக்யமுங் கேட்டாயே. நாரத வாக்யமுங் கேட்டாயே. இப்படியிருக்க (நாம்) என்னமாதிரி [நம்மாலே] இப்போது செய்யவேண்டியது? அத்தை நீ சொல்லு என்னத்தானும் ஸர்வஜ்ஞனை ஸ்ரீகிருஷ்ணனாலே ஆஜ்ஞாபிக்கப் பட்டு[க்கொண்டு] அவருடைய ஆஜ்ஞையை ஶிரஸ்ஸிலே தரித்துக்கொண்டு விநயத்தினாலே தலையை வணங்கிக்கொண்டு இரண்டு கைகளையும் கூப்பிக்கொண்டு மெள்ள ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்து உத்தவன் ஒரு விஜ்ஞாபனம்பண்ணுகிறான்.

Colophon :

இதி ஸ்ரீபாகவதே மஹாபுராணே தஶமஸ்கந்தே
ஏகஸப்ததிதமோऽத்யாய:. ஸ்ரீக்ருஷ்ணாய நம:.

ஸங்க்ரஹம் இந்த எழுபத்தோராம் அத்தியாயத்திலே உத்தவருடைய ப்ரோத்ஸாஹனையினாலே ஸ்ரீ கிருஷ்ணன் த்வாரகையிலே யிருந்து இந்த்ரப்ரஸ்தத்துக்கு எழுந்தருளினதும் பாண்டவர்கள் உத்ஸவம் கொண்டாடினதும் ராஜஸூயயாகம் என்கிற

வ்ராஜத்திலே உபயோகாயநாதிகளை * * * *
* * * * * *

உத்தவன் சொன்னதைக் கேட்டு ஸ்ரீ கிருஷ்ணனும் ஸந்தோஷப்பட்டார். உக்ரஸேநாதி யாதவர்களும் ஸந்தோஷப்பட்டார்கள். இப்படி ஸந்தோஷப்படவே ஸ்ரீ கிருஷ்ணன் உபாயங்களை . . . .

(கு - பு.)—

இது முன் நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இப்பிரதியில் பத்தாம் ஸ்கந்தத்து ஐம்பத்து நாலாம் அத்தியாயத்தின் நடுவிலிருந்து ஆரம்பிக்கப்பெற்று எழுபதாம் அத்தியாயம்வரை முடிவுற்று எழுபத்தோராம் அத்தியாயம் ஒரு சிறிது பாகமே எழுதப்பெற்றுள்ளது. ஏடுகள் முறிந்துள.

R. No. 1061.

Śrītālam. 19 14/16 × 2 2/8 inches. Foll. 116. Lines, 11–13 on a page. Tamil and Grantha. Injured. Old.

Presented in 1935–36. By Śrī K. C. Gōpālācāryar, Subordinate Judge of Vizagapatam.

பாகவதம் தசமஸ்கந்தம் (வசனம்).
BHĀGAVATAM DAŚAMASKANDHAM (PROSE).

Same work as the above.

Incomplete.

Contains Adhyāyas 72—91 only.

(கு - பு.)—

இந்நூல் முன் நம்பர் பிரதிகளிலே வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலே இந்நூல் (72—91) அத்தியாயங்கள் வரையிலுமேயுளது. ஏடுகள் சிதலுற்றுள. இப்பிரதி முன் பிரதிகளைப்பார்க்கச் சிறிது சுத்தமாயுளது.

R. No. 1062.

Palm-leaf. 18 14/16 × 1¼ inches. Foll. 69. Lines, 7 on a page. Tamil and Grantha. Injured. Old.

Presented in 1935–36. By Śrī K. C. Gōpālācāryar, Subordinate Judge of Vizagapatam.

பாகவதம் தசமஸ்கந்தம் (ஶ்ருதிகீதை).
BHĀGAVATAM DAŚAMASKANDHAM (ŚRUTIGĪTAI).

Same work as the above.

Contains Adhyāyas 87—90 only.

(கு - பு.)—

இது முன நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இப்பிரதியில் பத்தாம் ஸ்கந்தத்தின் 87-ஆம் அத்தியாயம் முதல் 90-ஆம் அத்தியாயம் வரையிலான—"ஶ்ருதிகீதை", என்ற பகுதி மாத்திரம் உளது. ஏடுகள் மிகச் சிதிலமாயுள. பிழைகள் உள.

R. No. 1063.

Palm-leaf. 15 14/16 × 1¼ inches. Foll. 16. Lines, 6 on a page. Tamil and Grantha. Much injured. Old.

Presented in 1935–36. By Śrī K. C. Gōpālācāryar, Subordinate Judge of Vizagapatam.

கைசிக புராண வியாக்கியானம்.
KAIŚIKAPURĀṆAVĪYĀKKIYĀNAM.

Same work as that described under No. 418 (*i*) of the Triennial Catalogue of Tamil Manuscripts. Vol. IV.

Complete.

(கு - பு.)—

இந்நூல் மூவருடக்காடலாக்கு 418 (i) நம்பர் பிரதியில் வந்துள்ளதே யாம். இப்பிரதியில் முற்றும் உளது. ஏடுகள் மிகச் சிதலுற்று முறிந்து போயிருக்கின்றன. எழுத்துப்பிழைகளிருக்கின்றன.

R. No. 1064.

Palm-leaf. 17 6/16 × 1¼ inches. Foll. 79. Lines, 6 on a page. Tamil and Grantha. Injured. Old.

Presented in 1935–36. By Śrī K. C. Gōpālācāryar, Subordinate Judge of Vizagapatam.

பாரதம் உத்யோக பர்வம் (வசனம்).
BHĀRATAM UDYŌGAPARVAM (PROSE).

Same work as that described under No. 599 of the Triennial Catalogue of Tamil Manuscripts. Vol. V.

Contains Adhyāyas 1—32 only.

(கு - பு.)—

இந்நூல் மூவருடக்காடலாக்கு 599 ஆம் நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாம். இப்பிரதியில் 1—32 ஆன அத்தியாயங்களேயிருக்கின்றன. ஏடுகள் சிதலுற்றுள.

R. No. 1065.

Palm-leaf. 15½ × 1 6/16 inches. Foll. 80. Lines, 6 on a page. Tamil and Grantha. Injured. Old.

Presented in 1935–36. By Śrī K. C. Gōpālācāryar, Subordinate Judge of Vizagapatam.

பாரதம் கதா பர்வம் (வசனம்).
BHĀRATAM GADĀPARVAM (PROSE).

Same work as that described under No. 439 of the Descriptive Catalogue of Tamil Manuscripts. Vol. I.

Complete.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 439-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் கதாபர்வம் முற்றும் உளது. ஏடுகள் முறிந்து கிடக்கின்றன.

R. No. 1066.

Śrītālam. 8 14/16 × 1 14/16 inches. Foll. 35. Lines, 12 on a page. Tamil and Grantha. Much injured. Old.

Presented in 1935–36. By Śrī K. C. Gōpālācāryar, Subordinate Judge of Vizagapatam.

பாரதம் மௌஸலபர்வம் (வசனம்).

BHĀRATAM MAUSALAPARVAM (PROSE).

Same work as that described under No. 439 of the Descriptive Catalogue of Tamil Manuscripts. Vol. I.

Incomplete.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 439 ஆம் நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாம். இப்பிரதியில் மௌஸல பர்வத்தில் ஸ்ரீகிருஷ்ணன் வைகுண்டாரோஹணாநந்தரம் அவர் தம்முடைய பிரிவாற்றாமையால் வஸு தேவர் வருந்தும் வரையில் ஆன கதாபாகம் மாத்திரமேயுளது. சிதில மாயுளது. மிகப்பிழையுடன் காணப்படுகிறது.

R. No. 1067.

Śrītālam. 20½ × 2 6/16 inches. Foll. 83. Lines, 11 and 12 on a page. Tamil and Grantha. Injured. Old.

Presented in 1935–36. By Śrī K. C. Gōpālācāryar, Subordinate Judge of Vizagapatam.

பகவத்கீதை (உரையுடன்).

BHAGAVADGĪTAI (WITH COMMENTARY).

Same work as that described under No. 457 of the Triennial Catalogue of Tamil Manuscripts. Vol. IV.

Complete.

(கு - பு.)—

இந்நூல் மூவருடக்காடலாக்கு 457 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. ஏடுகள் மிகவுஞ் சிதலுற்று முறிந்திருக்கின்றன. எழுத்துப்பிழைகள் இருக்கின்றன. இப்பிரதியில் ஆரம்பத்தில் இதற்குரிய அங்கந்யாஸகரந்யாஸங்கள் முதலியன எழுதப்பெற்றுள. இறுதியிலே இக்கீதாப்ரசம்ஸகமான "கீதா மாஹாத்மியமும்", எழுதப்பெற்றிருக்கிறது.

R. No. 1068.

Śrītālam. 10 × 2¼ inches. Foll. 154. Lines, 12–14 on a page. Tamil and Grantha. Injured. Old.

Presented in 1935–36. By Śrī K. C. Gōpālācāryar, Subordinate Judge of Vizagapatam.

(a) பகவத்கீதை வியாக்கியானம்.
BHAGAVADGĪTAI VIYĀKKIYĀNAM.

Foll. 1—139*a*.

Same work as that described under No. 457 of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. IV.

Complete.

(கு - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 457 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. ஏடுகள் சிறிது சிதைந்திருக்கின்றன.

(b) கீதார்த்தஸங்கிரஹம்.
GĪTĀRTHASAṄGIRAHAM.

Foll. 139*b*—143*a*.

Gives the substance of the *Bhagavadgītā*, quoting relevant verses from the *Gītārthasaṅgraha* of Śrī Yāmunācārya (Āḷavandār.)

Beginning : ஸ்ரீகீதார்த்தஸங்க்ரஹ:.

யாமுநாசார்ய உவாச ?

ஸ்வதர்மஜ்ஞாநவைராக்யஸாத்யபக்த்யேககோசர: |
நாராயண: பரம்ப்ரஹ்ம கீதாஶாஸ்த்ரே ஸமீரித: ||

என்று முதல் ஶ்லோகத்தால் ஸ்வதர்மஜ்ஞாநவைராக்யஸாத்யமான பக்திக்கு விஷயமான ஸ்ரீமந்நாராயணனே பரப்ரஹ்மமென்று ஸ்ரீகீதாஶாஸ்த்ரத்தில் நிரூபிக்கப்பட்டது. (௧)

ஜ்ஞாநகர்மாத்மிகே நிஷ்டே யோகலக்ஷ்யே ஸுஸம்ஸ்க்ருதே |
ஆத்மாநுபூதிஸித்த்யர்த்தே பூர்வஷட்கேந சோதிதே ||

என்கிற இரண்டாஞ் சுலோகத்தால் ஆத்மாநுபவமாகிற பரமோக்ஷத்தைப் பெறுகிற யோகத்துக்கு ஜ்ஞாநகர்மங்களான இரண்டு நிஷ்டைகளும் ஸாதநங்கள்.

End :

ஜ்ஞாநீ து பரமைகாந்தீ ததாயத்தாத்மஜீவித: |
தத்ஸம்ஶ்லேஷவியோகைகஸுகது:கஸ்ததேகதீ: ||
பகவத்த்யாநயோகோக்திவந்தநஸ்துதிகீர்த்தநை: |
லப்தாத்மா தத்கதப்ராணமநோபுத்தீந்த்ரியக்ரிய: ||

நிஜகர்மாதி பக்த்யந்தம் குர்யாத் ப்ரீத்யைவ காரித꞉ |
உபாயதாம் பரித்யஜ்ய ந்யஸ்யேத்தேவே து தாமபீ꞉ ||
ஏகாந்தாத்யந்த தாஸ்யைகரதிஸ்தத்பதமாப்நுயாத் |
தத்ப்ரதாநமிதம் ஶாஸ்த்ரமிதி கீதார்த்த ஸங்க்ரஹ꞉ ||

என்னும் ஶ்லோக வசனத்தாலே தெளிவுள்ள பரமைகாந்தி தன் ஜீவநமும் பாரார்த்யம் என்று தெரிந்து அவனுடைய ஸம்ஶ்லேஷகாலத்திலே ஸேவித்து கைங்கர்யபரனாகி அவனுடைய த்யாநம் யோகம் இவைகளுடைய ஶாஸநத்தினாலேயும் வந்தநஸ்துதி கீர்த்தநங்களினாலேயும் உஜ்ஜ்வலனாகி ஸத்ருஶமான ப்ராணனோடே பரீந்த்ரியங்களுடனே கூடித்தன் வர்ணாஶ்ரமோசிதங்கள் ஶக்தி பர்யந்தமாக அநுஷ்டித்துத்தான் அநுஷ்டித்த கர்மங்களையும் தான் ஆசரித்த பக்தியையும் ஸாதநபுத்தி பண்ணாமல் கைங்கர்ய ரூபமாக த்யஜித்து அவன் பக்கலில் ஸமர்ப்பணம் பண்ணி ஸர்வத்ர ஸம்ஸாரஹிதனாகி கைங்கர்யாநந்த ரூபியாய்ப் பெற்று தத்பதமாகப் பெறுகிறான். இவையிற்றில் தாத்பர்யமுடைய(து) கீதாஶாஸ்த்ரமென்று ஸங்க்ரஹமாக வெளியிட்டு ஜநங்கள் மோக்ஷம் பெறவேணுமென்று பண்ணின யத்நத்தைப் பெரியோர்கள் ஸஹித்து ஸந்தோஷபாத்ரவர்களாகிக் கிருபை பண்ணித் திருவுள்ளம் பற்றக்கடவர்கள்.

லக்ஷ்மீபதியான ஶ்ரீமந்நாராயணன் ஹயவக்த்ராங்க ரூப கௌணநாம ஸ்வரூபனாகி ஸகலவேத ஶாஸ்த்ர ஸாரஸ்வாமியாகி

* * * * * * *

யுத்தத்திலே நிவ்ருத்தனாகியிருக்கிற பார்த்தனுக்கு யுத்தோத்ஸாஹமுண்டுபண்ணுகிற வ்யாஜத்தினாலே ஸர்வலோக ஜநங்களிடத்திலும் அநுக்ரஹமேலீட்டினாலே பரம புருஷார்த்தமான மோக்ஷத்துக்கு ஸாதநமான ஸகல வேதஶாஸ்த்ரத்தையும் ப்ரகாஶமாக வருளிச்செய்தார். இப்படி நடப்பிக்கிற ஸமஸ்த ப்ரபாவத்தை த்ருதராஷ்ட்ரன் தெரிந்தவன் ஆனாலும் புத்ரவாத்ஸல்ய மோஹத்தாலே விவேகஶூந்யனாகி துர்யோதனனுடைய விஜயத்தை அறியவேணுமென்கிற இச்சையினாலே ஸஞ்ஜயனை ப்ரஶ்நம் பண்ணுகிறான்.

ஹரி꞉ ஓம். ஶ்ரீ க்ருஷ்ணாய பரமாத்மநே நம꞉.
ஶ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹ ஸ்வாமிநே நம꞉.

(கு. - பு.)—

இப்பகுதி, ஆளவந்தார் இயற்றிய கீதார்த்த ஸங்க்ரஹத்தைத் தழுவி மணிப்ரவாள நடையில் அமைக்கப் பெற்ற ஒரு நூலாகும். ஆசிரியரின் பெயர் இதிலிருந்து விளங்கவில்லை. முற்றும் உளது. வடமொழியில் "கீதார்த்த ஸங்க்ரஹரக்ஷா" என்பதாக ஸ்ரீமத் வேதாந்த தேசிகனால் ஓர் விரிவுரை இயற்றப்பட்டுளது.

(c) 𑌗𑍀𑌤𑌾𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍍.

GĪTĀMĀHĀTMYAM.

Foll. 143 (*a*)—145 (*b*) 145 *b* is left blank. Foll. 146-155*a* Contain a complete copy of "*Śrī Viṣṇusahasranāma-stōtra*".

On the sacred importance of the *Bhagavadgītā*; taken from the *Skāndapurāṇa*,

Beginning :

𑌋𑌷𑌯 𑌊𑌚𑌁 :—

[illegible] |

[illegible] ||

[illegible] |

[illegible] ||

* * * * * *

𑌶𑍍𑌰𑍀𑌵𑍇𑌦𑌵𑍍𑌯𑌾𑌸𑌃 :—

[illegible] |

[illegible] ||

[illegible] |

[illegible] ||

[illegible] |

[illegible] ||

[illegible] |

[illegible] ॥

* * * * *

[illegible] |

[illegible] ||

* * * * *

[illegible] |

[illegible] ||

* * * * *

[illegible] |

* * * * *

[illegible] ||

Colophon :

[illegible] ||

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃.

(கு - பு.)—

இச்சிறு நூல் பகுதி ஸ்காந்த மஹாபுராணத்தின் உத்தர கண்டத்தில் பதின்மூன்றும் அத்தியாயமாக வமைந்து பகவத்கீதையின் மஹிமையி னையெடுத்து உணர்த்துவது. முற்றுமுளது. இதற்குப்பிறகு "ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமஸ்தோத்ரப்", பிரதியொன்று முற்றும் உளது. சிறிது சிதில மானது.

R. No. 1069.

Palm-leaf. 15¾ × 1¼ inches. Foll. 62. Lines, 8 on a page. Tamil and Grantha. Much injured. Old.

Presented in 1935–36. By Śrī K. C. Gōpālācāryar, Subordinate Judge of Vizagapatam.

வேதாந்த தேசிக வைபவ ப்ரகாசிகை.
VĒDĀNTADĒŚIKA VAIBHAVAPRAKĀŚIKAI.

Same work as that described under No 104 (*b*) of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. I.

(கு - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 104 (b) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் முற்றுமிருக்கிறது. இப்பிரதி ஷெ பிரதியைக் காட்டிலும் ஒரு சிறிது எழுத்துப்பிழையில்லாமலிருக்கிறது. ஏடுகள் எல்லாம் சிதலுற்றிருக்கின்றன.

R. No. 1070.

Palm-leaf. 15¾ × 1 6/16 inches. Foll. 100. Lines, 9 on a page. Tamil and Grantha. Injured. Old.

Presented in 1935–36. By Śrī K. C. Gōpālācāryar, Subordinate Judge of Vizagapatam.

திருவாய்மொழி.
TIRUVĀYMOḺI.

Same work as that described under No. 716 of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. II.

Complete.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 716 ஆம் நம்பரில் வந்துள்ள நூலே யாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்துள. எழுத்துப்பிழைகளிருக்கின்றன. இது முடிந்தபின்னர் மீண்டும் மற்றொரு பிரதி எழுதத்தொடங்கித் தனியன்களும் முதல் (2) பாடல்களும் மாத்ரம் எழுதப்பெற்றிருக்கின்றன.

R. No. 1071.

Palm-leaf. 15½ × 1½ inches. Foll. 139. Lines, 6 on a page. Tamil and Grantha. Injured. Old.

Presented in 1935-36. By Srī K. C. Gōpālācāryar, Subordinate Judge of Vizagapatam.

(a) திருவாய்மொழி.
TIRUVĀYMOḺI.

Foll. 1—100.

Same work as that described under No. 58 of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. I.

Complete.

(கு - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 58 ஆம் நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலே இந்நூல் முற்றும் உளது.

(b) இராமானுஜ நூற்றந்தாதி.
IRĀMĀNUJANŪṞṞANṬĀDI.

Foll. 101*a*—115*b*.

Same work as that described under No. 654 of the T.D.C. Vol. II.

Complete.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 654 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள தேயாம். இப்பிரதியில் இது முற்றும் உளது.

(c) 𑌶𑌠𑌕𑍋𑌪 𑌮𑍁𑌨𑌿𑌗𑌾𑌥𑌾 𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑌾.
ŚAṬHAKŌPAMUNIGĀTHĀPRAŚAṀSĀ.

Foll. 116*a*—121*b*.

Quotes verses from the *Purāṇas*, and explains them as praising the *Śrī Vaiṣṇava Āḻvārs* and their works.

Beginning :

𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌗𑌵𑌤𑍇 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑍇 𑌪𑌞𑍍𑌚𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 :—

[illegible]

[illegible] |

[illegible]

[illegible] ||

[illegible]

[illegible] :—

[illegible] | [illegible] |

[illegible] ||

[illegible] |
[illegible] ||
[illegible] |
[illegible] ||

* * * * *

[illegible]
[illegible] :—
[illegible] |
[illegible] ||
[illegible] |
[illegible] ||
[illegible] |
[illegible] ||

* * * * *

End :

[illegible] :—
[illegible] |
[illegible] ||
[illegible] :—
[illegible] |
[illegible] ||

(கு - பு.)—

இப்பகுதி, ஸ்காந்தம், பிராஹ்மம், மார்க்கண்டேயம், பிரஹ்மகைவர்த்தம், ஸ்ரீபாகவதம், விஷ்வக்ஸேநஸம்ஹிதை, ஆக்நேயம் முதலான பல புராணங்களிலிருந்தும் நம்மாழ்வார், அவரது திவ்வியப் பிரபந்தங்கள், இன்னும் மற்றையாழ்வார்கள், இவர்களுடைய மஹிமைகளையெடுத்து உணர்த்தும் பகுதிகளையாராய்ந்து எடுத்துத் திரட்டுவித்ததொரு நூலாகும்.

(d) ஆழ்வாராசார்யர்கள் வாழித் திருநாமம்.
ĀḺVĀRĀCĀRYARKAḶ VĀḺITTIRUNĀMAM.

Foll. 122*a*—125*a*.

Same work as that described under No. 1078 of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. II.

Contains up to Uḍaiyavarvāḻittirunāmam.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1078 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூல்போன்றது. இப்பிரதியில் உடையவர் வாழித் திருநாமம் வரையில் இருக்கிறது.

(e) இராமானுஜ நூற்றந்தாதி பிரதிபதவுரை.
IRĀMĀNUJANŪṞṞANTĀDI PIRATIPADAVURAI.

Foll. 127*a*—139*b*.

Same work as that described under No. 668 of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. II.

Incomplete.

Breaks off in the 28th Stanza.

(கு - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 668 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள தேயாகும். இதில் ஆதிமுதல் இருபத்தெட்டாம் பாடலின் உரைவரையு மேயுளது.

R. No. 1072.

Palm-leaf. 15 10/16 × 1¼ inches. Foll. 66. Lines, 6–9 on a page. Tamil and Grantha. Injured. Old.

Presented in 1935–36. By Śrī K. C. Gōpālācāryar, Subordinate Judge of Vizagapatam.

(a) இராமானுஜ நூற்றந்தாதி பிரதிபத வுரை.
IRĀMĀNUJA NŪṞṞANTĀDI PIRATIPADA VURAI.

Foll. 1—50.

Same work as that described under No. 668 of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. II.

Complete.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 668 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் முற்றுமிருக்கிறது. ஏடுகள் முற்றும் சிதலுற்றுக்கிடக்கின்றன.

(b) திருப்பாவை பிரதிபத வுரை.
TIRUPPĀVAI PIRATIPADA VURAI.

Foll. 51—66.

Gives a word-for-word meaning of the *Tiruppāvai* of Śrī Āṇḍāḷ.

Beginning :

திருப்பாவை பிரதிபத வுரை :—

மார்கழி - மார்கழி யென்கிற, திங்கள் - மாஸத்திலே, மதி - சந்திரனுலே, நிறைந்த - பூர்ணமான, நல் நாளால்-நல்ல நாளிலே, நீராட - நீராடும் பொருட்டு, போதுவீர் - போகவேணுமென்று

இச்சையுடைத்தானவர்கள் எல்லாரும், போதுமினோ - வாருங்கோள். நேர் இழையீர் - ஆபரணங்களையுடையரான, சீர் - ஐஶ்வர்யத்தினாலே, மல்கும் - ஸம்ருத்தமான, ஆய்ப்பாடி, திருவாய்ப்பாடியிலே, செல்வம் - ஸமஸ்தாஸக்தி ரூபமான ஐஶ்வர்யத்தை யுடைய, சிறுமியர்காள்! - பெண்பிள்ளைகாள்!, கூர்வேல் - கூர்மையான ஆயுதத்தையுடைய, கொடும் தொழிலன் - க்ரூரமான வியாபாரத்தையுடைய, நந்தகோபன் குமரன் - நந்தகோபர் குமாரனை, ஏர்ஆர்ந்த கண்ணி - ஸௌந்தர்யம் பூர்ணமான கண்களையுடைய, யசோதை இளம்சிங்கம் - யசோதையினுடைய பாலஸிம்ஹமான, கார்மேனி-மேகத்துக்கொப்பான திருமேனியுடைய, செங்கண்-ரக்திமையான நேத்திரங்களையுடைய, கதிர்மதியம் போல்முகத்தான்-சந்த்ர ஸூர்ய ஸாத்ருஶ்யமான திருமுகத்தையுடைய, நாராயணனே-அந்த ஸர்வேஶ்வரனே, நமக்கே - நமக்கு, பறை - கைங்கர்ய ரூபமான புருஷார்த்தத்தை, தருவான் - ஸாதிப்பான், பாரோர்புகழ - லோகத்தார் எல்லாரும் ஸ்தோத்ரம் பண்ணும்படியாக, படிந்து - அவகாஹிப்போம். ஏலோரெம்பாவாய் - இவை பாதபூரணார்த்தம். (க)

End :

திருமுகத்து-முகாரவிந்தத்தினையுடைய,செல்வ-ஸகல விபூதி நாயகரான, திருமாலால்-ஶ்ரிய:பதியாலே, எங்கும்-ஸர்வதேசத்திலும், ஸர்வகாலஸர்வாவஸ்தைகளிலும், திருவருள்பெற்று-ஸர்வேஶ்வரனாலே ரக்ஷிதாக்ஷகூரவையை வஹித்து, இன்புறுவர்-பிரம்மாநந்த யுக்தர்களாயிருப்பர்கள் * * * *

Colophon :

[க] (வ) ரக்தாக்ஷி ஸம்வத்ஸரம் மேஷஞாயிறு ஶுக்லபக்ஷம் த்ரயோதசி ஸ்வாதி நக்ஷத்திரத்தில் ஆராவமுது நாணு எழுதின திருப்பாவைப் பிரதிபத வுரை.

(கு - பு).—

இப்பிரதிபதவுரை, டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 704 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதினும் வேறாகவுள்ளது. இயற்றியவர் இன்னாரென்று இதிலிருந்து விளங்கவில்லை. ஏடுகள் எல்லாம் மிகச் சிதலுற்றுக்கிடக்கின்றன. எழுத்துப்பிழைகள் உள.

R. No. 1073.

Palm-leaf. 16½—1 6/16 inches. Foll. 17. Lines 7 on a page. Tamil Injured. Old.

Presented in 1935–36. By Śrī K. C. Gōpālācāryar, Subordinate Judge of Vizagapatam.

(a) உபதேச ரத்தின மாலை.

UPADĒSARATTINAMĀLAI.

Foll. 1—6.

Same work as that described under No. 10 (*a*) of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. I.

(கு - பு.)—

இந்நூல் மூலவருடக்காட்லாக்கு 10 (a) நம்பரில் வந்துள்ளதே. இப்பிரதியில் முற்றுமிருக்கிறது. ஏடுகள் மிக சிதைந்துள.

(b) திருவாய்மொழி நூற்றந்தாதி.
TIRUVĀYMOḺI NŪṞṞANTĀDI.

Foll. 7—14.

Same work as that described under No. 10 (*b*) of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. I.

(கு - பு.)—

இது மூலவருட க்காட்லாக்கு 10 (*b*) நம்பரிலே வந்துள்ளதே. இப்பிரதியில் முற்றுமுளது. ஏடுகள் சிதைந்துள. எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றன.

(c) அமலனாதிபிரான்.
AMALANĀDIPIRĀN.

Foll. 15—16*a*

This is the text of the work described under No. 650 of the Tamil Descriptive Catalogue, Vol. II.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 650-ஆம் நம்பரில் வந்துள்ளதுக்கு மூலமாகும். முற்றும் உளது. ஏடுகள் சிதிலமாயுள.

(d) கண்ணிநுண் சிறுத்தாம்பு.
KAṆṆINUṆŚIRUTTĀMPU.

Foll. 16*b*—17*b*.

Same work as that described under No. 671 of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. II.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 671-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இப்பிரதியில் முற்றும் உளது. ஏடுகள் சிதிலமாயுள.

R. No. 1074.

Palm-leaf. 9 × 1-6/16 inches. Foll. 288. Lines, 9 on a page. Tamil and Grantha. Injured. Old.

Presented in 1935–36. By Śrī K. C. Gōpālācāryar, Subordinate Judge of Vizagapatam.

திருவாய்மொழி வியாக்கியானம் இருபத்து நாலாயிரப்படி.
TIRUVĀYMOḺI VIYĀKKIYĀNAM IRUPATTUNĀLĀYIRAPPAḌI.

Same work as that described under No. 740 of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. II. By Jñānavairāgyānuṣṭhānaśēvadhi Śrīmad Vēdāntarāmānujayati

Contains 4 Pattus only.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 740-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள தேயாம். இப்பிரதியில் இந்நூல் ஆதி தொடங்கி (4) நாலாம் பத்து வரையிலுமேயுளது. ஏடுகள் முற்றும் சிதலுற்று இருக்கின்றன. "ஜ்ஞானவைராக்கியானுஷ்டானசேவதி ஸ்ரீமத் வேதாந்தராமாநுஜமஹா தேசிகன்", என்னும் ஆசிரியரால் இயற்றப்பெற்றதாகும். இருபத்து நாலாயிரம் கிரந்தங்களான் ஆனதுபற்றி இப்பெயர் பூண்டது.

R. No. 1075.

Palm-leaf. 18 × 1-6/16 inches. Foll. 173. Lines, 6 on a page. Tamil and Grantha. Injured. Old.

Presented in 1935–36. By Śrī K. C. Gōpālācāryar, Subordinate Judge of Vizagapatam.

குருபரம்பரா ப்ரபாவம்.
GURUPARAMPARĀPRABHĀVAM.

Similar to the work described under No. 1111 of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. II.

Incomplete.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1111-ஆம் நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலினும் வேறுய் விஷயங்களில் மாத்திரம் ஒரு சிறிது அடியொற்றியுளது. இளையாழ்வார் வைபவம்வரைக்கும் உளது. முற்றுப்பெறவில்லை. ஆசிரியர் இன்னார் என்று விளங்கவில்லை. நடைமாத்திரம் செவ்விதாகவுளது. இப்பிரதி மிக எழுத்துப்பிழையுடன் எழுதப்பெற்றிருக்கிறது.

R. No. 1076.

Palm-leaf. 20 × 1-1/2 inches. Foll. 30. Lines, 10 on a page. Tamil and Grantha. Injured. Old.

Presented in 1935–36. By Śrī K. C. Gōpālācāryar, Subordinate Judge of Vizagapatam.

(a) இராமானுஜ ரஹஸ்ய த்ரயம்.
IRĀMĀNUJARAHASYATRAYAM.

Foll. 1—10.

Same work as that described under No. 2484 of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. VII.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2484-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது. ஏடுகள் மிகச்சிதைந்து இருக்கின்றன. எழுத்துப்பிழைகளிருக்கின்றன.

(b) சின்னியம்மாள் ரஹஸ்யம்.
CINNIYAMMĀḶ RAHASYAM.

Fol. 11*a* ; Fol. 11*b* is left blank.

Contains the "Secret" doctrines of the *Tenkalai Śrī Vaiṣṇavas* and purports to be a dialogue between Cinniyammāḷ and Jīyar.

Beginning :

சின்னியம்மாள் ரஹஸ்யம் :—சேற்றுத்தாமரைக் கரையிலே ஜீயர் நீராடி நிற்க, சின்னியம்மாள் வந்து தண்டம் ஸமர்ப்பிக்க, (ஜீயர்) பெண்ணே! உன் தேசமேதென்ன, நித்ய நிவாஸமென்ன, நாடேதென்ன, திருவழுதி நாடென்ன, ஊரேதென்ன, திருக்குருகூர் என்ன, உங்கள் வீடேதென்ன, பண்டுடையான் வீடென்ன, குலமேதென்ன, அச்சுத குலமென்ன, உங்கள் வேதமேதென்ன, த்ராவிட வேதமென்ன, கோத்ரமேதென்ன, பராங்குச கோத்ரமென்ன.

End :

உங்கள் நிஷேதமேதென்ன, ... நிஷேதமென்ன, உபாயமேதென்ன, அபாயோபாயமென்ன, ஸாதனமேதென்ன, ஸாதனவதாஸாதனமென்ன, வ்யாவ்ருத்தியேதென்ன, கைங்கர்ய வ்யாவ்ருத்தி என்றாள். அவளுடைய ஸம்வாதத்துக்கு ஜீயர் திருவுள்ளம்பற்றிப் பாவேசும் ப்ரஸாதித்தருளினார்.

(கு - பு.)—

இந்நூல் மணவாளமாமுனிக்கும், சின்னியம்மாளுக்கும் நடந்த ஸம்பாஷணரூபமானது. இறுதியில் அவ்வம்மைக்குப் பரமபதம் பிரஸாதித்ததாகவுளது. இது ரஹஸ்யமாகத் தென்கலை ஸம்பிரதாயத்தினரால் போற்றப்படுகிறது.

(c) திருவாய்மொழி ஸங்கதி விவரணம்.
TIRUVĀYMOḶI SAṄGATI VIVARAṆAM.

Foll. 12*a* to 14*b*.

Explains the gist of the *Tiruvāymoḷi* of Śrī Nammāḷvār.

Beginning :

ஸ்ரிய:பதியாய் ஸர்வஜ்ஞஸர்வசக்தனாய் ஸமஸ்தகல்யாண குணாத்மகனான ஸர்வேச்வரன் "மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து", என்கிறபடியே ஜந்மபரம்பரைகளிலே ஒளிமாறி நித்ய ஸம்ஸாரியாய்ப்போந்த இவரை. * * *

End :

இவர் தம் வாயாலே "அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன்", என்று அருளிச்செய்யலாம்படி ஸ்வப்ராப்தியைப் பண்ணிக்கொடுத்த படியைச்சொல்லி ப்ரபந்தம் நிகமித்தருளினார். இப்படி ஊரும் நாடும் உலகும் தன்னைப்போல் என்கிறபடியே ஸர்வாத்மாக்களையும் திருத்தி பகவத்ப்ராப்தியோக்யராம்படி பண்ணுகிற இவ்வாழ்வாரை ஸகல ஹேயப்ரத்யநீக கல்யாணகுணனாய் ஸ்ரீபூமி நீளா நாயகனாயிருக்கிற மறைக்குன்றத்து நின்ற பெருமாளே ! ஆச்ரித ரக்ஷணார்த்தமாகத் திரிய வசனம் ஸாதித்தருளவேணும் (?)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

(கு - பு.)—

இந்நூல் நம்மாழ்வார் இயற்றிய திருவாய்மொழியின் ஸாராம்ஸப் பொருளையெடுத்துக்காட்டுகின்றது. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை. முற்றும் உளது. சிதிலம்.

(d) ஸ்ரீவைஷ்ணவதர்சந க்ரந்த நாமாவளி:.

ŚRĪVAIṢṆAVADARŚANA GRANTHANĀMĀVAḶIḤ.

Foll. 15*a*—17*b*.

A list of *Śrī Vaiṣṇava* religious works.

Complete.

Beginning :

உபயவேதாந்தங்கள் பெரிய திருமுடி யடைவில் சொல்லப்பட்டவை :—ஸேனைமுதலியார் ஸாதித்தருளினது, விஷ்வக்ஸேநஸம்ஹிதை. பொய்கையாழ்வார்ஸாதித்தருளினது,முதற்றிருவந்தாதி "வையந்தகளியா," என்கிற (௱) நூறு பாட்டு. பூதத்தாழ்வார் ஸாதித்தருளினது, இரண்டாந் திருவந்தாதி "அன்பேதகளியா," என்கிற (௱) நூறு பாட்டு. பேயாழ்வார் ஸாதித்தருளினது "திருக்கண்டேன்," என்கிற மூன்றாந்திருவந்தாதி (௱) நூறுபாட்டு. திருமழிசையாழ்வார் அருளிசெய்தருளின ப்ரபந்தங்கள், நான்முகன் திருவந்தாதி ௯௬-பாட்டும் திருச்சந்தவிருத்தம் (௱௨௰) நூற்றிருபது பாட்டும். * * *

நாதமுனிகள் செய்தருளின க்ரந்தங்கள், ந்யாயதத்வமும், யோகரஹஸ்யமும், புருஷநிர்ணயமுமாம். ஆளவந்தார் அருளிச் செய்த க்ரந்தங்கள்; ஸ்தோத்ரரத்நம், ஸித்தித்ரயம், ஸ்ரீகீதார்த்தஸங்க்ரஹம், ஆகமப்ராமாண்யம், சதுஶ்ஶ்லோகீ. (4) பெரியநம்பி செய்தருளினது, திருப்பதிக்கோவை.

End :

பெரிய ஜீயர் செய்தருளின க்ரந்தங்கள் :—தத்த்வத்ரயம், ரஹஸ்யத்ரயம், ஸ்ரீவசநபூஷணம், ஆசார்யஹ்ருதயம், ஜ்ஞாநஸாரப்ரமேயஸாரங்கள், பெரியாழ்வார் திருமொழி, நூற்றந்தாதி ஆக இத்திவ்விய ப்ரபந்தங்களுக்கு வ்யாக்யாநங்களும், ஈட்டுப்ப்ரமாணத் திரட்டு, தத்த்வத்ரய ப்ரமாணத்திரட்டு, ஸ்ரீவசநபூஷண ப்ரமாணத்திரட்டு, ஆர்த்திப்ரபந்தம், யதிராஜ விம்சதி, உபதேசரத்தின மாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, திருவாராதந க்ரமம். ஆகப் பதினாறு (௰௬)

ஆகப் பெரிய திருமுடியடைவிலே சொல்லப்பட்ட திவ்யப்ரபந்தங்கள (௱௯௰௮).

ஜீயர் திருவடிகளே சரணம்.

(கு - பு.)—

இப்பகுதி பெரிய திருமுடியடைவிலே குறிக்கப்பட்டிருக்கிற ஆழ்வார் ஆசாரியர்கள் முதலியோர் ஸ்ரீவைஷ்ணவதர்சநத்திலே பின்னோர்களுக்கு உபகாரமாக இயற்றியருளின தர்சந க்ரந்தங்களுடைய பெயர்களைக் குறிப்பிடுகின்றது. மிக எழுத்துப்பிழையுடன் உளது. ஏடுகள் சிதிலமாயுள.

(e) கோயிற்றிருவாய்மொழி.

KŌYIṞṞIRUVĀYMOḺI.

Foll. 18*a*—28*b*.

Same work as that described under No. 29 of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. I.

Incomplete.

(கு - பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 29-ஆம் நம்பரில் வந்துள்ள நூலே யாகும். இப்பிரதியிலே நம்மாழ்வாரது திருவாய்மொழிகளிலே "மாலை நண்ணித்தொழுதெழுமினோ," என்ற திருவாய்மொழிப்பதிகம் வரையிலு மேயுளது. ஏடுகள் மிகச் சிதலுற்றன.

(f) ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் ப்ரபந்தம்.

PRATIVĀDIBHAYAṄKARM AṆṆAN PRABANDHAM.

Foll. 29*a*—30*a*.

Same work as that described under No. 913 of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. II.

Complete.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 913-ஆம் நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாம். இப்பிரதியிலே பதிநான்கு செய்யுட்கள் இருக்கின்றன. ஏடுகள் சிதைந்துள. எழுத்துப்பிழைகள் உள.

R. No. 1077.

Palm-leaf. 14 × $1\frac{3}{4}$ inches. Foll. 326. Lines, 6-9 on a page. Tamil and Grantha. Much injured. Old.

Presented in 1935-36. By H. M. A. Shakoor, Esq., L.I.M., Doctor, Pudupet, Madras.

அகத்தியர் வைத்திய சூத்திரம் ஆயிரத்தைந்நூறு.
AKATTIYAR VAIDDIYASŪTTIRAM ĀYIRATTAINNŪṞU.

Same work as that described under No. 1895 of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. V.

Complete.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1895-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாம். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. இதில், அப்பிரதியில் இல்லாத சில பாடல்கள் இருப்பதோடு அங்கங்கே பக்குவாகப் பாடபேதங்களும் இருக்கின்றன.

R. No. 1078.

Palm-leaf. $14\frac{6}{16}$ × $1\frac{6}{16}$ inches. Foll. 112. Lines, 8 on a page. Tamil and Grantha. Injured. Old.

Presented in 1935-36. By H. M. A. Shakoor, Esq., L.I.M., Doctor, Pudupet, Madras.

நைடதம்.

NAIḌADAM.

Same work as that described under No. 111 of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. I.

Wants leaves, 71 to 96, 133 to 138 (both inclusive) in the middle.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 111-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இப்பிரதியில் இது, மத்தியில் சில படலங்கள் நீங்கலாக முற்றுமிருக்கிறது. ஏடுகள் சிதிலமாயிருக்கின்றன.

R. No. 1079.

Palm-leaf. $10\frac{1}{2}$ × $1\frac{1}{4}$ inches. Foll. 160. Lines, 6 on a page. Tamil. Much injured. Old.

Presented in 1935-36. By H. M. A. Shakoor, Esq., L.I.M., Doctor, Pudupet, Madras.

(a) அகத்தியர் சூத்திரம் ஐம்பது.
AKATTIYAR SŪTTIRAM AIMPADU.

Foll. 1—30.

Same work as that described under No. 172 of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. II.

Complete.

(கு - பு.)—
இந்நூல் மூவருடக் காட்லாக்கு 172-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் அறுபத்தோரு பாடல்கள் காணப்படுகின்றன. அதி சிதிலம்.

(b) அகத்தியர் பச்சை பதினாறு.
AKATTIYAR PACCAI PADINĀṞU.

Foll. 31—36.

Same work as that described under No. 145 (*e*) of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. II.

(கு - பு.)—
இந்நூல் மூவருடக் காட்லாக்கு 145 (*e*) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். - சிதிலம்.

(c) ஞானக்கப்பல்.
JÑĀNAKKAPPAL.

Foll. 37—41.

Religious songs.

Beginning :

கப்பல் பாட்டு. ஞானம் :—

ஏலேலோ ஏலேலோ தத்தையாய்
முக்கணனை யான் தொழுது
முதுமை ஞானக் கப்பலோட்டும்வகை
சிக்கெனவே யெட்டெழுத்தைச்
சேர்த்து ஒரு கப்பல் வைத்து.

End :

அஞ்ச[ா]க்கரச்(சர)க்கையத்துறையில் வித்து
ஆதி(ெ)யன்னுங் குருவருளாற் பாடினேன் முத்து.

(கு - பு.)—
இந்நூல் ஞான விஷயமானதொரு " கப்பற்பாட்டு ", என்று வழங்கப்பெறும் சிறு நூலாகும். இப்பிரதியில் இது முற்றும் உளது. சிதிலமாயது. எழுத்துப்பிழைகளுடன் உளது. இந்நூலினிறுதியில் " பாடினேன் முத்து ", என்றிருப்பதால் ஆசிரியர் ' முத்து', என்பவராயிருக்கலாம்.

(d) மதனகாமேசுவர லேகிய முறை (கோரக்கர்முறை).
MADANAKĀMĒSUVARALĒHIYAMUṞAI (GŌRAKKARMUṞAI).

Foll. 42—45.

A medical treatise of the *Siddha* School of Indian Medicine.

Beginning :

அகவல் :—

பருவதத்தில் வாழும் பராபரத்தினருளால்
பொறுமையுள்ள புண்ணியர்க் குப்புகலக்கேள்
கர்மவினைகள் பொடிபடவே விதித்த
காமேசு . . . . மறவாமல் தின்பவர்க்கு
அனுதினமு மாற் தாரங்கடைந்து
அஞ்செழுத்தின்னுள்ளாக

End :

கொட்டியிதைக்கிளறி, நன்றாய்
மெழுகாய்க் கிண்டிதான்
பீங்காடப்பியிலேயடைத்துக்கொள்
சற்பரை பூசைகொள் அரைக்கழஞ்சி வீதம்.
* * * * * * *
கொஞ்சமென்று எண்ணாதே சித்தர் விதந்தான்.

(கு - பு.)—

இப்பகுதி மதனகாமேசுவர லேகியமுறையையெடுத்து உணர்த்துவது. கோரக்கரது முறையென்று முதலிற் கூறியுளது. பிழைகளுடன் உளது. படித்தற்குமரிதாய் அத்துணை சிதிலமாயுளது.

(e) கருவூரார் நொண்டி மாலை.
KARUVŪRAR NONḌIMĀLAI.

Foll. 46—118. Fol. 119 is left blank.

Same work as that described under No. 936 (*b*) of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. VI.

Incomplete.

(கு - பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 936 (*b*) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இப்பிரதியில் இது முற்றிலுமில்லை. அதி சிதிலம்.

(f) சட்டை முனி காயகற்பம் நூறு.
ṢAṬṬAIMUNI KĀYAKAṞPAM NŪṞU.

Foll. 120—128.

Same work as that described under No. 145(*c*) of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. II.

Contains 1—36 stanzas only.

(கு - பு.)—

இந்நூல் மூவருடைக் காட்லாக்கு 145 (c) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இப்பிரதியில் 1—36 பாடல்களே உள. ஏடுகள் அதி சிதிலமாயிருக்கின்றன.

(g) அகத்தியர் கருப்ப சூத்திரம்.
AKATTIYAR KARUPPA SŪTTIRAM.

Foll. 129—132.

On 'conception' and allied medical matters.

By Akattiyamuni.

Complete.

Beginning :

அகத்தியர் கருப்ப சூத்திரம்.

பாரப்பா பெண்களுடைக் கருப்பங் கே[ளீர்] (ளாய்)
பக்குவத்தைச் சொல்லுகிறேன் பண்பாய்த்தானே
ஆரப்பா ஆண்மலடேயாகுமல்லால்
அப்பனே பெண்மலடே யாருமில்லை
நேரப்பா . . . இருந்து பொருளேயீந்து
நேரானதொன்றுமில்லை யிதனலப்பா
வேரப்பா தேவதையால் எழாங்கருப்பம்
விரித்து நன்றுய்ப் புகலுகிறேன் விரும்பிக்கேளே. (க)

* * * * * * *
* * * * * * *
* * * * * * *

End :

ஆகியதோர் அகத்தியமுனி கடாட்சத்தாலே
அப்பனே புத்திரயோக சித்தியாமே. (யக)

* * * * * * *
* * * * * * *

பிள்ளையுண்டாம் பிராயமுமிளைமையாலே. (யஉ)

கருப்பசூத்திரம் முற்றும்.

(கு - பு.)—

இச்சிறு நூல் பெண்களுடைய கருவுத்பத்தியாகுந் திறனையெடுத்து உணர்த்துவது. பன்னிரண்டு பாடல்களைக்கொண்டுள்ளது. அதி சிதிலமாயுளது.

(h) வான்மீகர் மணிக்கடைக் கயிற்றுச்சூத்திரம் முப்பது.
VĀNMĪKAR MAṆIKKAḌAI KAYIṞṞUCCŪTTIRAM MUPPADU.

Foll. 133—138.

Same work as that described under No. 940 (*f*) of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. VI.

Complete.

(கு - பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 940-(?) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இப்பிரதியில் இது முற்றும் உளது. ஏடுகள் மிகவுஞ் சிதிலமாயிருக்கின்றன. எழுத்துப்பிழைகள் மிகவும் உள. 139-ஆம் ஏடு முதல் 20 ஏடுகளில் வைத்திய விஷயமான சில வாக்கியங்களும், பாடல்களும் தொடர்பில்லாமல் எழுதப்பெற்றிருக்கின்றன.

R. No. 1080.

Palm-leaf. $14\frac{3}{4} \times 1\frac{1}{2}$ inches. Foll. 229. Lines, 7 on a page. Tamil and Grantha. Much injured. Old.

Presented in 1935–36. By H. M. A. Shakoor, Esq., L.I.M., Doctor, Pudupet, Madras.

(a) மரணகண்டிகை உரையுடன்.
MARAṆAKAṆḌIKAI WITH COMMENTARY.

Foll. 1—57.

Same work as that described under No. 2021 of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. VI.

(கு. பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2021-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. ஏடுகள் எல்லாம் மிகவுஞ் சிதிலமாயுள. எழுத்துப்பிழையுடனிருக்கிறது.

(b) கோசாரபலன்.
GŌCĀRAPALAN.

Foll. 58—63.

An astrological treatise.

Beginning :

கோசாரபலன் :—

செம்பொன் மூன்றிரவியைந்து
திங்களொட்டெரியோனேழு
கோபனுய் சுங்கறு
கோளிராயிருநான்கொன்று
. . . . மேதைநாலு
நற்சனி சென்மம் நிற்கில்
உம்பர்கோனெனினுமாளும்
முற்கெடும்புணியுண்டேனே. ? (க)

End :

வலியொடு பிறநீர்வாதம்
பித்தமுஞ்சிலேற்பனங்கள்
நலியொடுநரம்பு. . . . .
. . . . ந்துளேப்பத்

திலியொடு பிறநீர் வாதம்
. .லியொடு குற்றிளைப்புத் .
தீரில் நல் விஷங்கலப்பு
எலி விஷம் நஞ்சு போகும்
. . . . இராகு
கேது வார்கொடுக்கும் நோயே[ா] (உ௰சு)

? குளி கண் குணம் :—

* * * * * * *

* * * * * * *

கன்னிமான் . . . நடப்பதாகும்
மென்கலை தகரேயுச்சி
மிதுனமும் துலாமும் நீசம்
மன்னிய குடமீன் பங்கம்
மரித்திடு . . . .
. . . . யே.
பன்னிரண்டாமிராசியிற்பார்வைதானே. (உ௰அ)

(கு. பு.)—

இந்நூல் இரகங்களுடைய சாரங்களால் ஏற்படும் சுபாசுப பலன்கள் பலவற்றையும் எடுத்து உணர்த்துவது. இருபத்தெட்டு பாடல்களைக்கொண் டுள்ளது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஏடுகள் மிகச் சிதிலமாயிருக் கின்றன. எழுத்துப்பிழைகள் மிகவுள.

(c) ஸம்ஸ்க்ருத சூர்ணிகா.

SAMSKṚTA CŪRṆIKĀ.

Foll. 64 and 65.

Contains prayers addressed to Gods Śiva, Gaṇapati and others.

Beginning :

ஸ்ரீமது ஜயஜய ராஜ ஸ்ரீமது.

* * * *

End :

ஸ்ரீமதுமஹேந்த்ர வர்த்த ஸ்ரீமதுஷண்முகதேவ.

* * * *

ஜய ஶ்ரீ நாராயண * * * *

ஸ்ரீமது ஜய மங்களம். ஸர்வஜயமங்கள ம்.

நித்யஶுபமங்களம் ||

(கு - பு.)—

இச்சிறிய பகுதி சிவன், கணபதி, விநாயகன் முதலிய தேவதை களை விளித்து மங்களமாகப் பாடப்பட்டதாகும். பிறகு ஒரு வடமொழி பத்யம் உளது. மிகப்பிழையுடன் உளது.

(d) ஶில்பிகர்ம (உரையுடன்).

ŚILPIKARMA (WITH MEANING).

Foll. 66—125 ; Foll.126—129 left blank.

Religious verses for the use of masons, builders and others.

Beginning :

ஶில்பிகர்ம. ஹரி: ஓம்.

[illegible]

[illegible]

* * * * [illegible]

[illegible] |

[illegible] || (க)

[illegible]

[illegible] |

[illegible] || (உ)

[illegible] |

[illegible] ||

End :

[illegible] |

[illegible] ||

[illegible] |

* * * * * * * *

[illegible] |

[illegible] . . . .

(கு - பு.)—

இந்நூல் " சில்பிகர்ம ", என்னும் பெயர் பூண்டதாய்ச் சில்பிகளுடைய செய்கைகளை யெடுத்து உணர்த்துவது. முற்றுப் பெற்றதெனத் தோற்ற வில்லை.

(e) சோதிடநூல்.

ŚŌTIḌANŪL.

Foll. 130—172.

A treatise on Astrology.

Beginning :

மகாதிசை பலன் :—அசுவதி மகம் மூலம்:—கேது எ, சுக்கிரன் உ௰, ஆதித்தியன் சு, சந்திரன் ௰, செவ்வாய் எ, இராகு ௰அ, வியாழன் ௰சு, சனி ௰கூ, புதன் ௰எ, கேது எ. பரணி பூரம் பூராடம் :—சுக்கிரன் உ௰, ஆதித்தன் சு, சந்திரன் ௰, செவ்வாய் எ, இராகு (௰அ) * * *

End :

புதன் நாள் ௫௱௰-க்குப் பலன்—தவம், தானம், வத்திரலாபம், ஆபரணம், ஞானம். கேது நாள் ௨௱௰-க்குப் பலன்—வஞ்சனை, அர்த்தநாசம், பித்தம் உண்டாம். சுக்கிரன் நாள் ௪௱௨௰-க்குப் பலன்—நோய், புன்சொல், சத்துருவால் அச்சம். ஆதித்தன் நாள் ௱௨௰௬-க்குப் பலன்—தருமம், தானம் உண்டாம். வெள்ளி நாள் ௬௱-க்குப் பலன்—திரியுண்டாம்,? அர்த்தம் உண்டாம். ஆதித்தன் நாள் ௱௮௰-க்குப் பலன்—புகழ், கீர்த்தி யுண்டாம்.

சந்திரதசை வருஷம் ௰-ம் சரி.

(கு - பு.)—

இது சோதிட விஷயமானது. இதில், மகாதசை பலன்கள், துவாதச பாவபலன்கள், கோளதுமாலை, இராசிக்குணம், அஷ்டகவர்க்கம் என்னு மிவையடங்கியுள. ஏடுகள் எல்லாம் மிகச் சிதிலமாயிருக்கின்றன.

(f) சந்தியாவந்தன மந்திரம்.
SANDHIYĀVANDANA MANTIRAM.

Foll. 173—176. Foll. 177—188 are left blank.

Twilight and midday prayers.

Beginning :

ஹரி: ஓம். ப்ருதிவ்யா மேருப்ருஷ்ட ருஷி: | ஸுதலம் சந்த: | கூர்மோ தேவதா | ஆஸநே விநியோக: || இந்த மந்திரஞ்சொல்லி சலத்தைக்கையிலேயேந்தி ஆஸநப்ரோக்ஷணம் செய்யவும். "அபவித்ர: பவித்ரோ வா ஸர்வாவஸ்தாம் கதோபி வா | ய: ஸ்மரேத் புண்டரீகாக்ஷம் ஸ பாஹ்யாப்யந்தர: சுசி: ", || இந்த மந்திரஞ்சொல்லிச் சலத்தைக் கையிலே வாங்கித் தலையைச் சுற்றிவிடவும். கேசவாய நம: | நாராயணாய நம: | * * * * *

கோவிந்த என்று சலத்தை மோந்து விடவும்.

End :

உபவீதம் தரிக்க மந்த்ரம்.

யஜ்ஞோபவீதம் பரமம் பவித்ரம் ப்ரஜாபதே:

யத்ஸஹஜம் புரஸ்தாத் ஆயுஷ்யமக்ர்யம் ப்ரதிமுஞ்ச

சுப்ரம் யஜ்ஞோபவீதம் பலமஸ்து தேஜ: ||

(கு - பு.)—

இச்சிறு பகுதி சந்தியயை வழிபடுதற்குரிய சில மந்திர தந்திரங்களை யெடுத்து உணர்த்துவது. எழுத்துப்பிழை மிக உள. அதி சிதிலமாயுளது.

(g) கௌளிக்காதல்.

GAUḶIKKĀDAL.

Fol. 189; Fol. 190 is left blank.

Similar to the work described under No. 354 of the Triennial Catalogue. Author's name, not known.

Incomplete.

Beginning :

கௌளிக்காதல் :—

மார்பினிற் கோபஞ்சொல்லும்
வலமுலேலாபஞ் சொல்லும்
தாரணி தடந்தோளாகில்
தலமது ஆகாதென்னும்
சீரணி வலக்கையாகில்
செ[ப்பு](யமு)டன் வரவு சொல்லும
நேரொடு முதுவிலாகில் . . .
நினவுடன் யெளுந்திரியென்னும் ? . .
இடமது பலகையாகில்
இனியதோரின்பம் உண்டாம்.

* * * * * * *

End :

* * * * * * *

* * * * * * *

மெள்ளவேயகமுமேறும், விருந்தது வரத்துத்தானே. || உ ||
காரியில் மொழியும் பல்லிக் . . . . காலொன்றூனும்
மாரியும் மழையும் பெய்யும் மன்னவர் வரவு சொல்லும்
எங்கேதான் போவீராகில் இயல்வுடன் கருமம் நன்றும்.

(கு - பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 354-ஆம் நம்பர் பிரதி போன்றது. முற்றுமில்லை. ஏடுகள் மிகச் சிதிலம். பிழைகள் உள.

(h) கௌளிக்காதல்.

GAUḶIKKĀDAL.

Foll. 191 and 192.

Same work as the above, but with the addition of one Stanza at the end, which is not related to the above work.

Incomplete.

(கு - பு.)—

இது முன் பிரதியில் வந்துள்ளதே. இப்பிரதியினிறுதியில் இதைச் சாராத ஒரு பாடல் அதிகமாகவுளது. இப்பிரதியின் ஏடு மிகச் சிதைந்துளது.

(i) ஶிவஸஹஸ்ரநாமார்சநா.

ŚIVA SAHASRANĀMĀRCANĀ.

Foll. 193—206.

Same work as that described under Sanskrit D. No. 9282.

Complete.

(கு - பு.)—

இதில் சிவ ஸஹஸ்ரநாமார்ச்சனைமுற்றிலுமுளது. அதி சிதிலமானது. பிழையுடன் உளது. நூலினிறுதியில் " காக்கும் பெருமாளின் ஸஹஸ்ர நாமார்ச்சனை ", என்று ஒரு வாக்கியம் உளது.

(j) லலிதா ஸஹஸ்ரநாமார்சநா.

LALITĀSAHASRANĀMĀRCANĀ.

Foll. 207—229.

Same work as that described under Sanskrit R. No. 185 (*a*).

Complete.

Beginning :

ஶ்ரீமாதா நம꞉ | ஶ்ரீமஹாராஜ்ஞ்யை நம꞉ |
ஶ்ரீமத்ஸிம்ஹாஸநேஶ்வர்யை நம꞉ | சிதக்நிகுண்டஸம்பூதாயை நம꞉ | தேவகார்யஸமுத்யதாயை நம꞉ |

End :

அஜ்ஞாநத்வாந்ததீபிகாயை நம꞉ | * * * *
ஶ்ரீஶிவாயை ஶிவஶக்த்யைக்யரூபிண்யை நம꞉ | * * *
ஓம் லலிதாம்பிகாயை நம꞉ | * * * *

(கு - பு.)—

இது லலிதா தேவியின் வழிபாட்டிற்குரிய ஸஹஸ்ரநாமார்ச்சனையாகும். ஏடுகள் எல்லாம் மிகச் சிதலுற்று இருக்கின்றன. எழுத்துப்பிழைகளும் உள. இதன் கடைசியிலும் " காக்கும்பெருமாள் லலிதாஸஹஸ்ரநாமார்ச்சனை ", என்று உளது.

R. No. 1081.

Palm-leaf. $13\frac{5}{16}$ × $1\frac{1}{2}$ inches. Foll. 88. Lines, 8 or 9 on a page. Tamil and Grantha. Much injured. Very old.

Presented in 1935–36. By H. M. A. Shakoor, Esq., L.I.M., Doctor, Pudupet, Madras.

(a) அகத்தியர் வைத்திய சூத்திரம் இருநூற்றைந்து.

AKATTIYAR VAIDDIYASŪTTIRAM IRUNŪṞṞAINDU.

Foll. 1—6.

Same work as that described under No. 5 (*a*) of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. I.

Incomplete. Contains stanzas 1—37 only.

(கு - பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாகு 5 (a) நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் 1—37 ஆன பாடல்களேயிருக்கின்றன.

(b) அகத்தியர் கர்மகாண்டம் முந்நூறு.
AKATTIYAR KARMAKĀṆḌAM MUNNŪṚU.

Foll. 7—26.

Same work as that described under No. 5 (b) of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. I.

Contains Stanzas, 124–220 and 291-301 only.

Incomplete.

Beginning :

* * * * * * *
* * * * * * *
(௱உ௰௪)

சிறப்பான கவுளி பாத்திரமேயாகிற்
செப்பரிது தைலமிது முடுக்கு மெத்த
உரைப்பாக வின்னமொரு செய்திகேளு
உத்தமமாம் நாற்பத்து (நாரத்தை) வில்வ விளம் வாழை
மறப்பானே[ன்]னெலுமிச்சு கொளுஞ்சிவா . வருக்கை
மாதளேயிேனுடு கொம்மட்டி தானும்
நிறைப்பாகுங் கொன்றையத்தியியசங்குதேற்றுன் ?
நிலையான முந்திரிகைப்பேரீச்சத்தோடே. (௱உ௰௫)

End :

போடப்பா வரைத்தரைத்துப் பொற்கையாண்றன்
புகழான புடத்திலே யெருநூறுலே
ஆட்க்கேள் புடமங்கேஜம் பத்தொன்றில்
ஆகாகர்வருணன் நிறம்போலேயாகும்
தேடக்கேள் செந்தூரமான் பின்புத்
தினமொன்றில் இருநேரங் குன்றிவீதம்
நாட்க்கேள் மண்டலமே கொண்டாயானல்
நலமேது சாவு பொய் நாடிக்காணே. (உ௱௰௧)

* * * * * * *
* * * * * * * ||உ௱உ௰||

The Scribe adds :—

"முகம்மது ராவுத்தர் குமாரன், மகம்மது மீராராவுத்தர் குமாரன் பீருமகம்மதுக்குக் 'கர்மகாண்டம்'; கூத்தாநல்லூரிலிருக்கும் காசிமழலவர் எழுதிநிறைந்தது முற்றும். துன்முகிஞு சித்திரைமீ ௪௨ எழுதி முடிந்தது முற்றும்.

(கு - பு.)—

இது மூவ்ருடக்காட்லாக்கு 5 (b) நம்பரில் வந்துள்ளதே. இப்பிரதியில் 124-ஆம் செய்யுளிலிருந்து 220 ஆம் செய்யுள்வரைக்கும், 291 ஆம் செய்யுளிலிருந்து 301 ஆம் செய்யுள் வரைக்குமேயுளது. முதலிலும் நடுவிலும் சில எடுகள் போயிருக்கின்றன.

(c) குருநாடி.
GURUNĀḌI.

Foll. 27—42.

Same work as that described under No. 1920 of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. V, but with the addition of one introductory stanza.

Complete.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ்காட்லாக்கு 1920 ஆம் நம்பர் பிரதியி லுவந் துள்ளநூலேயாகும். இப்பிரதியில் 100 செய்யுட்களே காணப்படுகின்றன. ஷெ பிரதியில் அதிகமாக ஏழு செய்யுட்கள் காணப்படுகின்றன. ஏடுகள் மிகச் சிதிலமாயுள. பிழையுள.

(d) மதனநூல் கொக்கோகம்.

MADANANŪL (KOKKŌKAM).

Foll. 43—81.

Same work as that described under No. 188 of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. II.

Contains Adhyāyas 1—6 only.

(கு - பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 188 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் முதல் அத்தியாயந் தொடங்கி ஆறும் அத்தி யாயம் வரையிலேயே யிருக்கிறது. எழுத்துப் பிழைகள் உள. ஏடுகள் முற்றும் சிதலுற்று இருக்கின்றன. இதில் பாயிரம் எழுதப் பெற்றுளது.

(e) திருமறைக்காட்டீசுவரர் துதி.

TIRUMAṞAIKKĀṬṬĪŚUVARARTUDI.

Foll. 82—88b.

An Eulogy on God Śiva as worshipped at Tirumaṟaikkāḍu.

Incomplete.

Beginning :

அங்காடி சுரைக்காய்ப்போல் முலேயினுர்கள்
யாவருங் கொப்பளிக்கலுற்ற படிகவாயாற்
கங்கானதெனடித்த பிடவைதாசர் ?
தம்புகின்ற பா . . . . . . யல்குலார்கள்
. . . ங்கானு மோரிடத்தாசையில்லா
திருமே பொது மாதர்கள் சுகத்தை நீக்கி
மங்காத வெள்ளை விடைதன்னிலேறும்
மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (ருஙக)

பணந்தானே குலங்கல்வி பரத்தை மார்க்குப்
பணந்தானே சுகபோகம் பரத்தைமார்க்குப்
பணந்தானே யலங்காரம் பரத்தைமார்க்குப்
பணந்தானே பஞ்சுமெத்தை பரத்தைமார்க்குப்
பணந்தானே கொடுத்தணைந்த

* * * * * * *

* * * * * * * (ருஙஉ

End :

ஆகமங்களிருக்கவே யதின்மேற் சற்றும்
அரைச்சணமே யானாலும் மனதில்லாமல்
பாவவடிவுருவான பரத்தைமாரைப்
பலகாலும் நம்புகின்ற பாவிகாளோ
நாகவிழ மந்திரத்தாற்றிரும்பும் வேசி
நாய் மருந்து விழச்சிம்பட்டாலெவராற்கூடும் ?
வாகனமே யேறிவரு மெம்பிரானை
மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (சுக)

எலியோடிப் பொறியிலிறை யெடுக்குமாறும்
ஈசனென்ற . . . .
. . . . (எ0)

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2179-ஆம் நம்பர் பிரதியிலே 'இராமய்யன் அம்மானை', யென்ற பெயரான் வெளிவந்துள்ள நூலே யாகும். இதனை இப்பெயரானும் வழங்கியுள்ளார்கள். இப்பிரதியில் திருமலைநாயகர் தாம், ஷெ மதுரைவீரன் மானுட வேடம் நீத்துத் தெய்வ வடிவாயிருக்குங்காலையிலே யவர்க்குப் பலி முதலியன இடாததினாற் துர்ப்பிக்ஷம் நேர்ந்திருப்ப, அதை நீக்கற்கு மீட்டும் அவர் குறையிரந்து பூசையிடும் பகுதி வரையிலும் உளது. ஏடுகள் எல்லாம் சிதைந்து கிடக்கின்றன. மிகப் பிழையுடன் உளது. அப்பிரதியில் காணப்பெறாத இரண்டு விநாயகர் விஷயமான காப்புச்செய்யுட்கள் ஈண்டு காட்டப்பெற்றிருக்கின்றன.

R. No. 1208.

Palm-leaf. 11¼ × 1¾ inches. Foll. 263. Lines, 12 on a page. Tamil. Injured. Old.

இருபு கீதை.

IRUBHUGĪTAI.

This is a rendering in Tamil of a work on the *Advaita Vēdānta*, by Ulakanāthapaṇḍita of Tiruviḍaimarudūr. Printed.

Foll. 1—3 contain an index of the above work.

Complete.

Beginning :

ஆனைமுகன் ஆறுமுகன் அருளாந்தேவி
யனந்தகண மளவற்ற முனிவர் தேவர்
ஏனையுள்ள நல்லன்பரியாவராலும்
எப்பயனும் பெறவேண்டி யிதயத்திங்கண்
ஊனமற வுபாசிக்கப்பட்டன்றோர்க் கிங்
குவந்த பயனருள் கருணைமூர்த்தியாகி
வானமென வகண்ட சிதாகாசமான
வத்துவதாம் பரசிவனை வணங்கற் செய்வாம் (க)

End :

வேறு.

தேசிகன் றெரிவித்த திறப்படி
தீரமாய் நிதித்தியாசம் புரிந்ததால்
ஈசனல்லருள் பெற்றவர் முத்தியை
யெய்தலாமென முன்பு விளம்பி மற்
றேசிலா விந்த நூலின் மகத்துவ
மியாவு மோதியி(ற்றை)[த்தை] முடித்திட
லாசிலானந்தத் தாண்டவ மாடுநம்
அம்பிகேசன் அகண்ட சொரூபமே (௫௧)

Colophon :

இப்படி மகேதிகாசமான சிவ ரகசியத்தின் ஆறும் அம்சத்தில் உள்ள இருபு கீதையின் நாற்பதிநான்காவது அத்தியாயம் முற்றிற்று. ஆக அத்தியாயம் நாற்பத்து நாலுக்குத் திருவிருத்தம் || ௲௬௱௨௰௬ ||

* * * * * * *

பிரமோதூதஞு மாசிமீ ௨௰௧௳ சுக்கிரவார[ம்]சுபதினத்தில் சென்னைப்பட்டினம் பாணக்காரத் தெருவு தமிழ்ப் பள்ளிக்கூடம் சுந்தர உபாத்தியாயரால் எழு[தி](தப்பெற்று) நிறைவேறியது.

(கு - பு.)—

இது வேதாந்த நூல்களைச் சார்ந்ததாய் அத்வைத மதத்ததாகும். " இருபு ", என்னும் பெரியாரால் நிதாகர் எனனும் முனிவர்க்கு உபதேசிக்கப்பெற்றது. வடமொழியிலிருந்ததைத் திருவிடைமருதூர் ' உலக நாதகவி ', தமிழின் மொழி பெயர்த்தது. முற்றுமுளது. அச்சிடப்பெற்றிருக்கிறது.

R. No. 1209.

Palm-leaf. 10 × 1 6/16 inches. Foll. 9. Lines, 7 on a page. Tamil. Injured. Old.

நாலாயிர திவ்வியப் பிரபந்தம்.

NĀLĀYIRADIVVIYAPPIRABANDHAM.

Same work as that described under No. 646 of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. II.

Contains Tiruppallāṇḍu, Tiruppaḷḷiyeḻucci and six stanzas of Tiruppāvai only.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 646-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இப் பிரதியில் திருப்பல்லாண்டும், திருபபள்ளி யெழுச்சியும், திருப் பாவையில் முதல் ஆறுபாடலும் இருக்கின்றன. ஏடுகள் சிதிலமாயுள.

R. No. 1210.

Palm-leaf. 17½ × 1¼ inches. Foll. 126. Lines, 8 on a page. Tamil. Injured Old.

நாலாயிர திவ்வியப் பிரபந்தம் (முதலாயிரம்).

NĀLĀYIRADIVVIYAPPIRABANDHAM (MUDALĀYIRAM).

Same work as that described under No. 646 of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. II.

Wants leaves 103 and 104 in the middle.

Contains Mudalāyiram only.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 646-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலே முதலாயிரம் மாத்திரம் முற்றும் உளது.

R. No. 1211.

Palm-leaf. 8 2/8 × 1 inch. Foll. 47. Lines, 7 on a page. Tamil. Injured. Old.

பெண் பிள்ளை சாதக பலன்கள் (சோதிட நூல்).

PEṆPIḶḶAIJĀTAKAPALANKAḶ (ŚŌTIḌANŪL).

On Astrology.

Complete.

Beginning :

ஸ்த்ரீ ஜாதகம், பெண் பிள்ளை ஜாதகம்.

ஒன்றது சுத்தமாகச் சுபர் நிற்க ஒன்றேன்போந்து
வென்றிகொள் கேந்திரத்தில் மேவிட விளங்குரூபம்
துன்றிய[பி](ப)லமுந் தீர்க்கமாயுவு முண்டாங்கஞ்சம்
மென்றிடு முத்தாயன்பானுரைத்தன ரிறைவர்தாமே (க)

* * * * * * *

* * * * * * *

End :

பன்னிரண்டதனில் நற்கோள் நின்றிடப்
பணிந்த சொல்லாய்
மன்னிய சயனமாகுஞ் சுகத்தொடு
வழங்குந் தன்மம்
உன்னிய பாவராகில் வியாதி
துற் செலவுண்டாகும்
என்னவே ஸ்த்ரீகளுக்கு இயம்பினார்
இயல்புள்ளோரே (உயஉ)

இராசிப்பயன் முற்றிற்று.

* * * * * * *

Beginning :

பெண்பிள்ளை சாதகம்.

திருவனைய மடவாரம் புவியின்மீது
செனித்த பலன் சாதகத்தின் திறமேசுறு
கருவுதய காலே லக்கினஞ் சசி லக்கினமுங்
கண்டு வடிவும் நிறமுங் கருதவேண்டு
மருவிய சத்தம ராசி யாலவ[ள்த](ட)ன்
குணுகுணமுந் தெரிந்து வுழுத்தவேண்டு
முருவுதய லக்கினத்திந் திருக்கிலழகுள்ளா
ளோ ரேழிற் சசி யிருக்கப் பர்த்தா வழகுள்ளானே. (க)

End :

கண்ணுரொட்டில் மதியு முறக்
காணுமொரு வனங்கிஷத்தி (அம்சத்தில்)
னண்ணியிருக்க வவ்வீட்டான்
நயந்தேயெட்டிலிருந்ததனுல்
எண்ணு . . . தில் மரணமெனு.
இனி தாங்கன்னி கோலிடப
முன்னிற் சிங்க மீதிலம் மதி
யுற்ருலற்ப புத்திரனே.

ஸ்த்ரீஜாதக பலன் முற்றும்.
ஆழ்வாராதிகள் திருவடிகளே சரணம்.

த்ரிம் சா(ம்ச)ம். சூரியாதி நவ கிரகங்கள் எந்த ராசியிலும் வந்த நாள் முதல் அந்த ராசிவிட்டு மறு ராசிக்குப் போகிற வரைக்கும்
* * * * * * * * * *
வியாழன் எட்டு (அ), சனி (ரு), செவ்வாய் (ரு), இந்தப்படித் த்ரிம்சாம்சம்
* * * * * * * * * *

(கு - பு.)—

இவ்விரண்டு பகுதிகளும் ஸ்த்ரீ ஜாதகப் பலன்களை யெல்லாம் எடுத்து உணர்த்துகின்றன. நூலாசிரியர் பெயர் இன்னதென்று தெரியவில்லை. இதில் மற்றுக் ' கலியாணப் பொருத்தம் ', என்ற பெயருடன் சிறிய பகுதி யொன்றுளது.

R. No. 1212.

Paper. 10¾ × 9¼ inches. Foll. 218. Lines, 20 on a page. Tamil and Grantha. Condition good. Not printed.

Restored in 1938–39 from a manuscript in the Library.

ஹஸ்திகிரி மாஹாத்மியம் (தமிழுரையுடன்).
HASTIGIRIMĀHĀTMIYAM (WITH A TAMIL COMMENTARY).

Complete.

Same work as that described under No. D. 2601 of the Sanskrit Catalogue.

(கு.-பு.)—

இந்நூல் ஸம்ஸ்கிருத டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2601-ஆம் நம்பரில் வந்துள்ளதைப் பெயர்த்து எழுதி வைக்கப் பெற்றதாகும். இவ்வுரை இன்னும் அச்சிடப்பெறவில்லை.

R. No. 1213.

Paper. 10¾ × 9¾ inches. Foll. 108. Lines, 20 on a page. Tamil. Condition, good. New. Not Printed.

Restored in 1938–39 from a manuscript in the Library.

பாலபோத விலக்கணம்.

BĀLABŌDHAVILAKKAṆAM.

Complete.

Same work as that described under No. R. 778.

(கு.-பு.)—

இது, மூவருடக் காட்லாக்கு 778-ஆம் நம்பரில் வந்துள்ளதைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாகும்.

R. No. 1214.

Paper. 8 × 7¼ inches. Foll. 265. Lines, 22 on a page. Tamil. Condition, good. New. Printed.

Presented in 1938–39 by Sri P. Rājagōpāla Mudaliyār of Triplicane.

ஞானவாசிட்டம் by விரை ஆளவந்தான் முனிவர்; உரையுடன்

ÑĀNAVĀSIṬṬAM by ĀḶAVANDĀN MUNIVAR OF VĪRAI; WITH A COMMENTARY.

Wants a few lines in the end, otherwise complete.

Same text as that described under No. D. 1526.

Beginning :

ஞானவாசிட்டம்.

வைராக்யப் பிரகரணம்.

அவதாரிகை:

வடமொழியிலுள்ள ஞானவாசிட்ட நூலைத் தமிழ்ச் செய்யுளின் மொழி பெயர்க்கப் புகுந்த இந்நூலாசிரியர், இது நிர்விக்கினமாய் நிறை வேறும் பொருட்டு விநாயகமூர்த்தியைச் சகுணமாகவும் நிர்க்குணமாகவும் உபாசனை செய்கின்றார்.

பெண்மை பாதியன் பெற்ற களிற்றினை
யண்மை தூர மறவகத் துன்னுவாந்
திண்மை ஞானச் சிறப்புயர் வாசிட்ட
முண்மையாக வொருங்குரை செய்யவே.

(இ-ள்.) திடம் பொருந்திய வாக்யார்த்த போதச் சிறப்பினால் மேன்மையாக விளங்கிய ஞானவாசிட்டத்தைக் கீர்வாணத்திலுள்ள பிரகாரமாகத் தமிழ்ச்

செய்யுளான் முழுதுஞ் சாற்றும் பொருட்டு உமைபாகனுகிய பரமசிவன் ஈன்றருளிய யானைமுகத்தினையுடைய விநாயகமூர்த்தியை அண்மை சேய்மை யின்றி இடைவிடாம லுள்ளத்தின்கட் சிந்திப்பாம். என்பதாம்.

நூல்.

அவதாரிகை.

வசிட்டோபதேசமான சுவாநுபவத்தைக் கீர்வாணசுலோகமாய்ச் சொல்லப் புகுந்த வடநூலாசிரியர் இந்நூல் நிர்விக்கினமாய் நிறைவேறி யாவருஞ் சிரவணஞ் செய்யும்பொருட்டு ஆத்மஞான சாட்சாத்கார ஸ்வ ரூபத்தை நிருபாதிக நிட்டையினுலுஞ் சோபாதிக நிட்டையினுலும் விலக்ஷண சலக்ஷணமாக வுபாசனை செய்கின்றுர்.

(வேறு.)

பொன் னுலகத்தினிற் புவியிலந்தரத்
தென் னுடை யுட்புறத் திலங்குகின்றது
மன்னு சிற் சோதியே வடிவுமியாவுமாய்த்
துன்னு வதப் பொரு டொழுதி றைஞ்சுவாம்.

Colophon :

வைராக்யப் பிரகரணம் முற்றிற்று.
முமுட்சுப் பிரகரணம் முற்றிற்று.
உத்பத்திப் பிரகரணம் முற்றிற்று.
திதிப் பிரகரணம் முற்றிற்று.
நிர்வாணப் பிரகரணம் முற்றிற்று.

End :

சம்பத் தாபத்திரண்டினு நீ சமமாய் வந்ததனு சரிக்கி
னம்பற் சங்கமகன்ற வனீநாளுந்திரள் வத்துவிற்சமமாய்
விம்பத் திதயச் சமத்துவனுய் மேவும் பகுதித்திறமியற்றி
யிம்பர்ச் சங்க மறுத்தின்ப மிசைவாயிராம வெனச் சொன்னுன்.
(எக)

(இ-ள்) சுகதுக்கங்களாகிய விரண்டினும் நீ சமத்துவனுகி வந்ததை யனு சரித்தால் நீ ஆசையின் பெருக்கமாகிய சங்கத்தைவிட்டவன். எப்பொழுதும் திரண்ட வஸ்துக்களில் சமத்துவமாகப் பிரிதி விம்பமான விருதயத்தில் சாத்துவித குணத்தை யுடையவனுய் வாராநின்ற காரியங்களைச் செய்து இவ்விடத்திலுள்ள திரிசியசங்கத் . . . . .

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1526-ஆம் நம்பர் பிரதியின் உரைப்பிரதி. இந்நூலில் வைராக்யப் பிரகரண முதல், உபசாந்திப் பிரகரண மீருக வுள்ள அறுவகைப் பிரகரணங்களும் உரையுடன் இருக்கின்றன. உரை யியற்றினுர் பெயர் தெரியவில்லை. அச்சுப் பிரதிக்கும் இதற்கும் பல வேற்றுமைகள் காணப்படுகின்றன. இந்நூலில் ஒவ்வோர் உட்பிரிவை யும் அடுத்து, பொருளட்டவணை யொன்று காணப்படுகிறது. இறுதியில் சைவபுராணம், பூரணநந்தோதயம், தேவாரம் முதலியவற்றிலுள்ள சிற் சில பாடல்களின் அட்டவணையுமுளது.

R. No. 1215.

Palm-leaf. 12 × 1¾ inches. Foll. 163. Lines, 12 on a page. Tamil. Injured. Old. Extent, 2,200 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

பிரபோதசந்திரோதயம் (மெய்ஞானவிளக்கம்) by திருவேங்கடநாதர்

PIRABŌDHACANDIRŌDAYAM (MEYÑĀNAVIḶAKKAM) by TIRUVEṄKAṬANĀTHAR.

Complete.

Same work as that described under No. D. 1593.

Colophon :

பிரபோத சந்திரோதயம் முற்றும். சாலிவாகன சகாப்தம் (சூளாருரு—1755) விஜயஹு தைமீ ௰அஉ புதன்வாரமும் உத்திரநட்சத்திரமுங் கூடின சுபதினத்தில் மெய்ஞான விளக்கமாகிய பிரபோத சந்திரோதயம் எழுதி முடித்தேன். பாளையங்கோட்டைக் கடுத்த தாம்பிரபர்ணி நதியோரம் குட்டத் துறையிலிருக்கும் வேதமூர்த்தி.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1593-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள தேயாம். முற்றும் உளது. ஏடுகள் முற்றும் மிகவும் சிதலுற்று இருக்கின்றன.

R. No. 1216.

Palm-leaf. 15½ × 1¾ inches. Foll. 259. Lines, 11 on a page. Tamil and Grantha. Injured. Old. Extent 5,000 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti. Tinnevelly Town.

குருபரம்பரா ப்ரபாவம்—ஆறுயிரப்படி by பின்பழகிய பெருமாள் ஜீயர்.

GURUPARAMPARĀPRABHĀVAM ĀṞĀYIRAPPAḌI by PINBAḺAKIYA PERUMĀḶ JĪYAR.

Complete.

Same work as that described under No. R. 45 (*a*).

Colophon :

விஜயநாம ஸம்வத்ஸரம் உத்தராயணம் பங்குனிமீ ௩௰உ வியாழக்கிழமையும் அசுவிநி நக்ஷத்திரமுங் கூடிய சுபதினத்திலே குருபரம்பரா ப்ரபாவம் நாராயண பிள்ளைக்கு அர்ச்சனை சீனிவாஸய்யங்கார் அபிமானத்துக்குட்பட்ட, வானமாமலை அய்யங்கார் ஸ்வஹஸ்தலிகிதம்.

பின்பழகிய பெருமாள்சீயர் திருவடிகளே சரணம்.

(கு.-பு.)—

இது, மூவருடக் காட்லாக்கு 45 (a) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இதில் முற்றும் உளது. ஏடுகளெல்லாம் சிதைந்துள.

R. No. 1217.

Palm-leaf. 15 × 1¾ inches. Foll. 405. Lines 12—17 on a page. Tamil. Injured. Old. Extent 12,150 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

திருநெல்வேலித் தல புராணம் by நெல்லையப்பக் கவிராயர்.
TIRUNELVĒLITTALAPURĀṆAM BY NELLAIYAPPAKKAVIRĀYAR.

Complete.

A *purāṇa* dealing with the local religious importance of Tirunelvēli (Tinnevelly).

சீர்பூத்த விதழிபுனே சிற்பரனு . . . . தனுர்சியையோர் பாகர் ?
நீர்பூத்த திருவுளத்தி னினைத்தபடி வேதமுனி நிகழ்த்தலோடு
மேர்பூத்த வொருகோட்டா விலகுபாரத மேருவிடத்தே தீட்டும்
போர்பூத்த நெடுந்தடக்கைப் பொல்லாத பிள்ளைபதம் போற்றல் செய்வாம்.
* * * * * * * * (க)

மன்னுமுயர் தாரகப்பிரமம் வளஞ்சேர் நெல்லைமாநகருக்
கின்னவகைப் பேரைம்பதுந் தானெண்ணி யிருபோதுந் துதிப்போர்
தன்னையறிவர் தலைவனையுந் தானறிவர் தழைத்திருப்பர்
முன்னைவினைச் சஞ்சிதந் தவிர்ந்து மோட்சவீடும் பெறுவாரே. (கூ)

ஆகத் தலத்தின் பெயர் (ரூ) ஐம்பது.

கடவுள் வாழ்த்து.

சீருலாவு வெண்டிங்களங் கண்ணியன்
நீருலாவிய நீண்முடி வேணியன்
காருலாவு கழைவன நாயகன்
ஏரு லாவு பொற்பாத மிறைஞ் சுவாம். (க)

* * * *

அருமறையின் முழுமுதலாய் அகண்ட
பரிபூரண மாயனந்த கோடி
பெருகொளியாய் உபநிடதம் பேசரிய
சிற்பரமாய்ப் பேரானந்தந்
தருகருணை வடிவாகித் தாம்மிர
சபையூடு நின்று தக்கோர் போற்றத்
திருநடனம் புரிந்தருளுஞ் செம்பதுமக்
குஞ்சிதத்தாள் சிந்தை செய்வாம். (ச)

* * * *

அவையடக்கம்.

* * * *

* * * *

எந்தை **திருநெல்வேலி யிறையவனுர் திருக்கதையைப்**
புந்தியினி லறிவறியேன் புகல்வேனென் றுரைப்பதுதான்
சிந்தையினி லன்புடையோர் சிவபூசைத் திறநோக்கி
மந்தநடைச் சிறுமதலே மணலினிழைத் தாடலொப்பாம். (உ)

ஆணுவமா மலங்கழித்த வறிவுடையோர் முன்புசொல
நாணுமனத் தேனுரைத்த நலமிலாத் தமிழேனும்
வேணுவனத் தார்புகழை விரித்துரைக்குங் கதையதனற்
பேணுமனங் களிகூர்வார் பெருமைபெறு பெரியோரே. (ங)

வேறு.

ஆதியான் உமைபாற் சொன்னதருளுடை நந்திகேட்டுக்
கோதிலாச் சனத்குமாரர்க்கோதிடக்குறித்தே யன்னோர்
வேதம் நான்கெனச் செய்வேத வியாதர்க்கு விளம்பவன்னோர்
சூதர் பான்மூவாறுகச் சொல்லிய புராணந் தம்முள். (ச)

பலந்தரு **காந்தமென்னும் பதின்மூன்றும் புராணந்தன்னிற்**
கலந்துள சனற்குமார சங்கிதைக் காண்டங்கூறும்
நலந்தருந் **திருநெல்வேலி**நகர் நகர்க்கெலாம்மிக்க
தலம்புகழ்ப் **புராணந்தன்னைத்** தமிழினு லுரைக்கலுற்றேன். (ரு)

* * * *

விண்ணவர் பணிபொற் பாதர்விமலனர் திரு**நெல்வேலி**
யண்ணலார் தல**புராண** மருமறை வியாதன்கூறும்
நண்ணிய வடநூற் காதைநலம்பெறு சருக்கநூறும்
பண்ணுறு விருத்தப் பாவாற் பண்பொடு பகரலுற்றேன். (அ)

End :

தேவர்களும் முனிவர்களுஞ் சிறந்து வாழ்க
சிவமறையோர் வாழ்க மறைவேதர் வாழ்க
ஆவினமுந் தொண்டர் குழாமனைத்தும் வாழ்க
ஆகம சாத்திரங்களும் மெய்யறமும் வாழ்க
மேவு சைவநெறி திகழ வைதிகமு மோங்க
மேன்மைதரு பூதிசாதனமு மோங்கப்
பூவுலகு தழைக மழைபொழிக வேந்தர்
புகழோங்க மனுநீதி பொருந்தி வாழ்க. (நக)

Colophon :

திருநெல்வேலித் தலபுராணம் படித்த வேதியனைக் கண்ட மாபாவி கதியடைந்த சருக்கம் முற்றும். திருநெல்வேலித் தலபுராணம் முற்றும். ஆக (ச் செய்யுள்) (௬௯௱௰௨) (6912) சாலீவாடீச்வரர் காந்திமதியம்மாள் முன் நிற்க. ௲க௲௵ அவணிமீ ௰சஉ ஆதித்த வாரமும் சதய நட்சத்திரமும் பெற்ற தினத்தில் எழுதி முடிந்தது.

(கு.-பு.)—

இந்நூல், "திருநெல்வேலி", என்ற திவ்விய தலத்தினது மகிமையினை யுணர்த்துவதோர் நூலாம். தலபுராணங்களைச் சார்ந்ததாம். நூலாசிரியர் "நெல்லையப்பக் கவிராயர்", என்பவர் ஆவார். இதற்கு முதநூல் வடமொழி ஸ்காந்த புராணத்தில் உள்ள ஸநத்குமார ஸம்ஹிதையாம். இஃது அச்சிடப்பெற்றுளது. ஏடுகளெல்லாம் மிகச் சிதலுற்றிருக்கின்றன. இறுதியில் இந்நூலுக்கு ஒரு சருக்கவகராதியும் எழுதப் பெற்றிருக்கிறது. இதுக்கு நேராக வசன நடையான் ஒரு நூலை மதுரை சிவஞானத் தீபச் சபையின் காரியதரிசியாகிய ம. அழகர்சாமி பிள்ளையவர்கள் இயற்றியுள்ளார். அதுவும் அச்சிடப்பெற்றுள்ளது.

R. Nos. 1218—1222 [one bundle.]

Palm-leaf. 9½ × 1½ inches. Foll 59. Lines, 8 on a page. Tamil. Very injured. Old. Extent, 747 granthas.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

R. No. 1218.

அருணகிரி யந்தாதி by குகை நமச்சிவாயர்.
ARUṆAGIRI YANTĀDI by GUKAI NAMACCIVĀYAR.

Foll. 1—14. Extent, 212 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 237.

(கு.-பு.)—

இது, டிஸ்கிருப்டிவ் காட்லாக்கில் 237-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் முற்றும் உளது. இறுதியிலே "அந்தாதி செய்தார் அடியாரை யீடேற்ற, வந்தாதியாம் அருணை வள்ளலுக்குச்—சந்ததமும், மெய்யன் அருணகிரி மேவுங் குகைமீதில், அய்யன் நமச்சிவாயன்." என்ற இந்நூலாசிரியரது பெயர் உணர்த்தும் ஒரு வெண்பா அப்பிரதியில்லாததாய்க் காணப்படுகிறது.

R. No. 1219.

கந்தரனுபூதி by அருணகிரிநாதர்.
KANDARANUBHŪTI by ARUṆAGIRINĀTHAR.

Foll. 15-a—20-a. Extent 72 granthas. Printed.

Complete.

A poem in praise of God Kanda (Śrī Subrahmaṇya).

Beginning :

கந்தரனுபூதி.

ஆடும் பரிவேளணி சேவலெனைப்
பாடும்படியே பணியாய் அருள்வாய்
தேடுங்கயமுகனைச் செருவிற்
சாடுந்தனியானை சகோதரனே. (க)

உல்லாச நிராகுல யோகவிதச்
சல்லாப விநோதனு நீயலையோ
வெல்லாமறவென்னை யிகழ்ந்தவிதம்
சொல்லாய் முருகா சுரர்பூபதியே. (உ)

வானோ புனல்பார் கனல்மாருதமோ
ஞானோதயமோ நவில்நான்மறையோ
யானோ மனமோ வெனையாண்டவிடந்
தானோ பொருளாவது சண்முகனே. (ங)

End :

வினையோட விடுங்கதிர்வேல் புகழ்வேன்
மனையோடுதியங்கி மயங்குமதோ
சுனையோடருவித்துறையோடு பசுந்
தினையோடிதனோடு திரிந்தவனே. (சய)

தூசாமணியுஞ் சுடரும் புனைவான்
நேசாகுமரா நினதன்பருளால்
ஆசாநிகளந்து களான தின்பின்
பேசாவனுபூதி பிறந்ததுவே. (சஎ)

ஓராறுமுகத்தொருவர் சரணம்
ஒருபன்னிருதிண்புயனே சரணம்
பேராயிரமுள்ளவனே சரணம்
பேசற்கினியாய் சரணஞ் சரணம்
நீராய் நிலனாய் வெளிகாலொளியாய்
நினைவார்நினையும் நினைவே சரணம்
வேராய் முதலாய் நடுவானவனே
வேலாயுதனே சரணஞ் சரணம். (சஉ)

யாமோதிய கல்வியுமெய்யறிவும்
யாமே பெறவெம்மிறை தந்ததனாற்
பூமேல் மயில்போல் வருமே புணர்வீர்
நாமே நடவீர் நடவீரினியே. (சங)

(கு.-பு.)—

இது முருகக் கடவுள்மீது துதிரூபமாக அருணகிரியார் என்ற பெரியாரால் இயற்றப்பெற்றதாகும். அச்சிட்ட நூல்களில் ஐம்பத்தோர் பாடல்கள் காணப்படுகின்றன. இதிலே நாற்பத்துமூன்று பாடல்களே காணப்படுகின்றன. ஏடுகள் மிகவும் சிதைந்துள.

R. No. 1220.

கோவிந்தமாலை.

GŌVINDAMĀLAI.

Foll. 21—23. Extent 48 Granthas. Contains Stanzas 1—15 only

A moral poem with the refrain—*Accutānanta-Gōvindanē.*

Beginning :

கோவிந்தமாலை.

சலிக்கக்கணக்கென்னதான் பெற்ற
பிள்ளைக்குத்தாய் முலைப்பால்
ஒலிக்கக்களித்தமுதூட்டி
வளர்ப்பள் பின்னூழ்வினையாற்
பலிக்கும் படிக்கன்னையென்செய்வள்
பாலுடன் பாக்கியத்தைக்
குலுக்கிப்புகட்டுவளோ
வச்சுதானந்த கோவிந்தனே. (க)

எடுத்தாலும் பிச்சையமுது நன்றே
யில்லையேலுயிரை
விடுத்தாலும் வாசி நட்பில்லராம்
மனையில் விருந்துண்ணப்போ
யடுத்தாவதே தரைக்காசுக்குப்
போனகற்பாயிரம் பொன்
கொடுத்தாலுந்தான் வருமோ
வச்சுதானந்த கோவிந்தனே. (உ)

End :

உண்டானமாத்திரமல்லாற்
சௌரியமுள்ளவரைக்
கண்டார் சிலர் பயங்கொ
ண்டாரவர் போற் சயங்கைக்கொள்வரோ
வண்டாமறம்பாயும் புலியும் பாய்
அடையாளஞ் சுட்டுக்
கொண்டால் நரிக்கியல்போ
வச்சுதாநந்த கோவிந்தனே. (யரு)

(கு.-பு.)—

இந்த நூல் நீதி நூற்களைச் சார்ந்ததாய்க் "கோவிந்த சதகம்", என்றதைப் போலவுளது. நூலாசிரியர் இன்னுரென்று விளங்கிற்றிலர். இதுவும் மற்றவைகளைப்போல் நூறுபாக்களையுடைத்தாயிருக்கவேண்டும் எனத்தோற்றுகிறது. இதில் 1-15 பாடல்களேயுள. ஏடுகள் மிகவும் சிதலுற்றிருக்கின்றன. எழுத்துப்பிழையுள. இதுக்குப்பின்னர் ஓரேட்டில் உத்தம புருஷ இலக்கணங்களை விளக்கும் சில பாடல்கள் எழுதப்பெற்றுள.

R. No. 1221.

நியதிப்பயன்.

NIYATIPPAYAN.

Foll. 25—36. Extent 160 granthas.

Complete.

Same work as that described under R. No. 360 (*d*).

End :

சூரியன்றன்னை நமற்காரம்
பண்ணிற்றொடர் பிணியின்
வீரியமான வியாதியெலாம்
அறுமேன் மறுமைக்
கோரியலாமுத்தியுற்றிடு
மென்னவுரைத்திடுவர்
காரியமாநியதிப்பயன்
மாணவகண்டுகொள்ளே. (௱௧)

நியதிப்பயன் முற்றும்.

(கு.-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 360 (*d*) நம்பர் பிரதியில் வந்துள்ளதே யாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. இதிலிருந்தும் நூலாசிரியரின் இயற்பெயர் இன்னதென்று விளங்கவில்லை. ஏடுகள் சிதலுற்றுச் சிதைந்துள. இதன் இறுதியிலே 37-ஆம் ஏட்டில் திரு வாரூர்த் தேவாரப்பாடல் எழுதப்பெற்றுளது.

R. No. 1222.

மும்மணிக்கோவை by சிவக்கொழுந்து கவிராயர்.

MUMMAṆIKKŌVAI by ŚIVAKKOḺUNDU KAVIRĀYAR.

Foll. 41*a*—57*b*. Extent 255 granthas.

Complete.

A poem, in the *Mummaṇikkōvai* style, in praise of Vēlappa-paṇḍārap-periyār of Tiruvāvaduturai.

Beginning :

மலைதேர்புகழு மும்மணிக்கோவை சாற்றக்
கலை தேரிபமுகத்தோன் காப்பாம்—நிலைதேர்
திருவாவடுதுறைசைத்தேசிக வேலப்ப
குருபாத வர்ச்சனையாக்கொண்டு. (௧)

மதிசே[ர]ரார[ண்]?(ண) விதியாமதிபனுந்
திருவுறை மார்பத்தொரு பெருங்கடவுளும்
இந்திரன் முதலிய தந்திரப்புலவரும்
முனிக்கணமெவையுஞ் சனித்திடு மனிதரும்
யாவரும் யாவையும் மேவுறக்காணு
நித்திய சுத்த சத்திய நிறை . . . . . ப்
னபப்போதவன்பிற சோதி?

* * *

End :

அருள்வாழி மெய்மையடியவர் வாழி
யவனியின் மூவர்
அருள்வாழி யென்று பின்னுமிருவோர்
பணிவளளலெனுந்
தெருள்வாழியருயர் அடுதண்டுறை ?
வேலப்பதேசிகனடிப்
பொருள் வாழியென்றுள்ளப்பூ [ஞு] (நா)
முடிமுறை போன் மதித்தே ? (கூல)
மும்மணிக்கோவை முற்றும்.

(கு.-பு.)—

இந்நூல் திருவாவடுதுறை வேலப்ப பண்டாரப் பெரியாரின்மீது துதி ரூபமாய்ச் சிவக்கொழுந்து கவிராயர் அவர்களால் இயற்றப்பெற்றதாகும். மும்மணிக்கோவையென வழங்கப்பெறும். இது தொண்ணூற்றாறுவகைப் பிரபந்த விசேடங்களில் ஒன்று. இப்பிரதியில் முற்றுமுளது. ஏடுகளெல்லாம் சிதலுற்றுள. எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றன.

R. Nos. 1223—24 [one bundle.]

Palm-leaf. 13½ × 2 inches. Foll. 252. Lines, 18 on a page. Tamil. Injured. Old. Extent 6,936 granthas.

Purchased in 1938-39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti Tinnevelly Town.

R. No. 1223.

சிவஞானசித்தியார் சுவபக்க உரை by நிரம்பவழகியார்.

ŚIVAÑĀNASIDDHIYĀR SUVAPAKKA URAI by NIRAMBA-VAḶAKIYĀR.

Foll. 1—84. Extent 2,400 granthas. Printed.

Incomplete.

A commentary on the *Śivajñānasiddhiyār* of Śrī Aruṇandiśivācāriyār ; by Nirambavaḻakiyār.

Beginning :

காப்பு.

ஒரு கோட்டன் இரு செவியன் மும்மதத்தன்
நால்வாயைங்கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையன்
றருமொரு வாரணத்தின்றாள்கள்
உருகோட்டன் போடும் வணங்கியோவாதே
யிரவுபகலுணர்வோர் சிந்தைத்
திருகோட்டுமயன்றிருமால் செல்வமு
மொன்றோ வென்னச் செய்யுந் தேவே. (க)

உரை :—

ஒரு கோட்டன் என்பது= ஒரு கொம்பினையும் உடைய[ஞு](ரா)ய், இருசெவியன்= இரண்டு செவியினையும் உடைய[ஞு](ரா)ய்; மும்மதத்தன்= மூன்றுமதங்களை உடைய[ஞு](ரா)ய்; நால்வாயன்= நான்(ற)வாயினையும் உடைய[ஞு](ரா)ய்;

ஐங்கரத்தன்= துதிக்கையுடனே ஐந்து கரங்களையுமுடைய[னு](ரா)ய்; ஆறு, தருகோட்டம் பிறை, இதழித்தாழ்சடையன் தரும் ஒருவாரணத்தின் தாள்கள்= கங்காதேவியையும், வளைவுபெற்ற பிறையினையும், கொன்றைப்பூவினையும் உடைய நீண்ட திருச்சடாபாரத்தினையும் உடைய தம்பிரானுர் தரப்பட்ட ஒப்பில்லாத மூத்த நாயனுரது சீர்பாதங்களை; உருக்கோட்டு அன்புடன் வணங்கி= உருகி ஓடப்படாநின்ற பத்தியுடனே தண்டன் பண்ணி, ஓவாதே இரவுபகல் உணர்வோர்= ஒழியாதே அனவரதமும் நினைக்கிற பெரியோர்களுடைய; சிந்தைத் திருக்கோட்டு= இருதயங்களில் மலமாயாதி கன்மமென்கிற கோர குணங்களைப்போக்கும், அயன் திருமால் செல்வமும் ஒன்றேவெனச் செய்யும் தேவே = பிரம்ம விஷ்ணுக்களுடைய மாயா போகமாகிய ஐசுவரியமும் ஒரு பொருளோ வென்னும்படி ஞானச் செல்வமாகிய பரபோகத்தைக் கொடாநிற்கும் தேவே! என்பது. ஆகையால் இவனே கர்த்தாவென்று சொல்லப்படுவான் என்றவாறு. என்னவேயானும் இந்நூலைக்காப்பது நிமித்தமாக அந்தச் சீர் பாதங்களை ஒழியாதே அனவரதமும் எண்ணி இருதயத்திலே வைத்துக்கொள்ளா நின்றேன் என்பது கருத்து. இது காப்பு.

End :

இதனுற் சொல்லியது சத்தையும் அசத்தையும் அறிகிறது ஆன்மாவென்றும், இதனுடைய உண்மை சத்துமல்ல அசத்துமல்ல என்றும், அழியாதவனுமாய்ச் சத்துடன் கூடினபொழுது சத்தும், அசத்துடனே கூடினபொழுது அசத்துமாய் நிற்கையால் சதசத்தென்றும், அதிசயமாகத் தோன்றிநில்லாதென்றும், தோன்றுமல் நில்லாதென்றும், இதுதோன்றுகிற முறைமை மலரின் மணம்போலும் என்னும் முறைமையும் அறிவித்தது. உாசயக.

இப்படி மலரும் மணமும் போலும் . . . .

(கு.-பு.)—

இந்நூல் "சிவஞான சித்தியார்", என்னும் நூலுக்கு நிரம்பவழகியார் என்பவரால் இயற்றப்பெற்றதொரு விரிவுரையாகும். சுவபக்ஷம் என்ற பகுதியாகும். இவ்வுரை அச்சிடப்பெற்று உளது. (அச—ாஉஅ) ஆன ஏடுகள் காணப்பெறவில்லையாதலின் நூன்முற்றுமில்லை.

R. No. 1224.

சிவஞானசித்தியார் பரபக்கஉரை by திருவொற்றியூர் ஞானப்பிரகாசர்.

SIVAÑĀNASIDDHIYĀR PARAPAKKA URAI by ÑĀNAPPIRAKĀSAR OF TIRUVOṚṚIYŪR.

Foll. 85—252. Extent 4,536 Granthas. Printed. Complete.

Same work as that described under No. D. 1264.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1264-ஆம் நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாகும். முற்றும் உளது. ஏடுகள் மிகச்சிதலுற்றன.

R. No. 1225.

Palm-leaf. 14½ × 1¼ inches. Foll. 277. Lines, 6 on a page. Tamil. Much injured. Old. Extent 4,146 granthas. Printed.

Purchased in 1938-39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

இராமநாடகம் by அருணாசலக் கவிராயர்.
IRĀMANĀṬAKAM BY ARUṆĀCALAKKAVIRĀYAR.

Complete.

Same work as that described under No. D. 473.

Colophon :

ஞான சம்போக ராம நாடகம் இசையாற் சொல்லுங்
கான பாகவ தருள்ளங் களித்திட விதனைக் கேட்டுத்
தான மாயுலகிலுள்ள சவுபாக்கிய முந்தந் தோர்கள்
வான நாட்டரசன் போல வசீகரம் பெற்று வாழி.
உயு[த்திய] (த) காண்டம் முற்றும்.

விரோதிஞூ மார்கழிமீ உ௮௳ திருவொற்றியூர் விநாயக முதலி யார் படிக்கின்ற இராமாயண கீர்த்தனை எழுதி முடிந்தது. முற்றும்.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 473-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் முற்றும் உளது. அச்சிட்ட பிரதிக்கும் இதற்கும் மிகவேற்றுமை காணப்படுகிறது. ஏடுகள் எல்லாம் மிகச்சிதைந்துள.

R. No. 1226.

Palm-leaf. 13 × 1¾ inches. Foll. 168. Lines, 11 on a page. Tamil. Injured. Old. Extent 4,000 granthas. Printed.

Purchased in 1938-39 from Sri Muttukkumārasvāmi Ōduvārmūrtti, Tinnevelly Town.

தத்துவப்பிரகாசம், உரையுடன் by தத்துவப்பிரகாசர்.
TATTUVAPPIRAKĀŚAM WITH COMMENTARY by TATTUVAPPIRAKĀŚAR.

Complete.

A commentary on the text of a work by Tattuvappirakāśar described under R. No. 369. The commentator's name is unknown.

Beginning :

தத்துவப்பிரகாச வுரை.

செந் திருவிளங்கு முயர் கா[ளி] (ழி)யான்
பரவு சீர்காழி யெல்லை விட்டுத்
திகழ் மதுரை யெய்தியே யருள் நந்திதேசி
கனெனத் திருநாம மிட்டுப்-

புந்தி மகிழ்வாகி யாசாரியாபிஷேகமும்
பொலிவுறச் செய்ததன்பின்
பொதிய வரையிற் சென்று கும்பமுனியைக்கண்டு
போற்றியவர் கருணை பெற்றே-
வந்து வேளாண் குறிச்சியில்
வைத்தவாமமயதுவைத்த ?
சட்டைப் பெருமாண் முதன் மூவரை
மருவுகுரு பீடமாக்கி . . .
சாந்து பயில் வசுதேவையரசன் மகட்
பிரம்ம ரட்சசைத் தவிர்த்தகுருவே
தத்துவப்பிரகாச தேசிகா
மெய்ஞானச் சகலாகமச்சலதியே. (க)

ஏடுபெறவே சகல சங்கிரக மென்னவோ
ரிலட் சங்கிரந்த முஞ்செய்தியற்
சரியை கிரியை யோக ஞானம் . . .
[] (நான்கி)னையு மொன்றுய்ப்
பாடுபெறு தத்துவப்பிரகாசமென்ன
வோர் பனுவலுங் கற்க நிற்கப்
பார்மீதிலுண்டாக்கி வி . . . னதிசயம்
பகர்வதற்கெளிதாகுமோ
நீடுபுகழரசனூர் புளியறைப்பதியினுள்
நிலமூன்றில் ஒன்று நல்க
நில . . றுதென்காசி தலவாசமாகவே
நிலைபெற்றிருந்த குருவே
சாடுபனிரண்டி[லி]லே ? யேடுகொடுவந்த
பரசமயக்கோளரியை வென்ற
தத்துவப்பிரகாச குருதேசிகா
மெய்ஞானச் சகலாகமச்சலதியே. (உ)

காப்பு.

இந்நூல் ஞான நூலாயினும் பாயிரம் உரைத்தே உரைத்தல் தகுதியாகப்படுதலினால் அது நூற்பெயரும், காரணமும், ஆக்கியோன் பெயரும், அளவும், பயனும், உரைத்து உரைக்கும் பகுதியுடைத்து.

இந்நூல் மெய்கண்ட சந்ததியிற் பொய்யினையகற்றி மெய்யினைக் கண்ட உத்தம சீலன் தத்துவப்பிரகாசனாற் செய்[தமை] (யப்பெற்றமை) யால் "தத்துவப்பிரகாசம்", என்று பெயராயிற்று. முன்னூலால் சரியை, கிரியை, யோகம், ஞானம், ஆதியாக விளங்கவேண்டுவார்க்குப் பலநூலுங் கற்றறியவேண்டுதலானும், சிவாகமநெறிப்படி (ஒழுக) வேண்டுதலானும், அவையனைத்துங் கற்றறிய வேண்டுமாதலால் இந்நூலகத்தே அந்நான்கின்பயனுஞ் சேரத் தெரிவிப்பது காரணமாகச் செய்யப்பட்டது.

இந்நூல் ஆசிரியர் " கற்றவர் பரவுஞ்சிற்றம்பல நாடிக், கழல்புனே சீலன் காழியம் பதியோன், * * * * * முத்திநெறி யருள் தத்துவப்பிரகாசன், மைதீர் வகையாற் செய்தமைத்தனனே "? இந்நூல் ஆசிரியவிருத்தம் முந்நூற்று முப்பத்தேழாகச் செய்யப்பட்டது. அவை சரியை, கிரியை, யாதி நானகும், அந்நான்கும் வகையாக அறிந்து பரசமய உட்சமய பேதம் நாற்பத்தெட்டின் கருத்தும் உணர்ந்து சைவ சித்தாந்த நெறியின் நிற்பது பயன் எனக் கொள்க. ஞான நூலுக் குப்பாயிரம் இன்றுமாயினும் இந்நூலாராயப்புக்கார்க்கு யாது சொல்லி யதோ என்னும் ஐயம்வருதலால் பாயிரங் கூறப்பட்டது. அல்லு தூஉம், " ஆயிரமுகத்தானமைந்த தாயினும், பாயிரமில்லது பனுவ லன்றே", என்றதனுற் பாயிரம் உரைத்தே நூலுரைக்கவென்பதுமாம் எனக.

பரையீன்ற தனியொளியே வடிவாய் ஞானம்
பகரிச்சை கிரியை மும்மத மாய்ப்பண்டை
வரையீன்ற வுமையீன்ற வைங்கை நால்வாய்
வளர் முக்கண்ணிரு செவியோர் வலியகோட்டு
நிரையீன்ற கிம்புரிக் கும்பக்களிற்றை
நெஞ்சகத்தின் வஞ்சகத்தைத் தவிர்ந்து நாளு
முரையீன்ற சொல்லினுல் விரையீன்ற மலரா
லுரைத்தருச்சிப்பவர் வினையின் வருத்தமறுப்பவரே.

என்பது காப்பு.

உரை :—

பராசத்தியிற்றேற்றப்பட்ட ஞானமே தனக்கு வடிவாய், தன்னிடத்துத் தோற்றப்பட்ட இச்சாஞானகிரியைகள் மூன்றும் (மும்)மதமுமாய், பழைய தாகிய இமவான் தரப்பட்ட உமையினிடத்தே வெளிப்படத் தோன்றி(ய) துதிக்கையுடன் ஐந்துகரத்தினையும், நான்ற வாயினையும், மூன்று கண் ணினையும், இரண்டு செவியினையும், ஒரு கோட்டினையும், கோட்டில் நிரைப் பட வடியிற் சேர்க்கப்பட்ட கிம்புரிப்பூணினையும், கும்பத்தலந்தனையும் உடைய யானைப் படிமத்தானை இதய வஞ்சகத்தைத் தவிர்த்து நாடோறும் பொருட்டெரி சொல்லானும், மருப்பயின் மலரானும், அருச்சித்துத் தோத் திரஞ்செய்யும் அடியா(ர்தம)து பிராரப்த வினையின் வருத்தம் ஒழிப்பார் என்றவாறு. தனியொளி = கேடுபடாதவொளி. 'பரையீன்ற' 'உமை யீன்ற ', என்றது, நிட்கள வடிவுஞ் சகள வடிவுங் கூறியது. (க)

End :

* * * * * *

வழிபட அதுவே முத்திப்புக[ழ்](ல)ாம் என்றவாறு. (நூாஙஎ)

சங்கரநமச்சிவாயர் பாதாரவிந்த மேகதி.

தன்னை யறிவிக்குந் தத்போதம் மாற்றுவிக்கு
மன்னரு ளானந்த மா[ற்று](க்கு)விக்கும்—மன்னியசீர்த்
தத்துவப்பிர காசனியற் சண்பையர்கோன் றுனுரைத்த
தத்துவப் பிரகாசநூறுன். (க)

ஊட்டியுறக்கி யுயிர்க்குயிரா யுண்ணின்று
காட்டுவது நானுனக்குக் கைவிளக்காய்—நீட்டிநிற்பான்
என்றான் கழுமலத்து மென்போல் வார்தன்னு(ள்)ளத்தும்
நின்றான் பிறவாநெறி. (உ)

தத்துவப்பிரகாசம் முற்றும்.

* * * *
* * * *
* * * *
* * * *

மெய்கண்ட தத்துவப்பிரகாசர் பாதாரவிந்தமே கதி.

வெள்ளிக்கிழமையும் சுபயோக சுபகரணமும் பெற்ற தினத்திலே திருவருளியல்பினாலே எழுதினது. சதசத்துக்குத் தத்துவப்பிரகாசர் திருவடிகளே சரணம். சுவாமி . . . . நாயகர் காந்திமதியம்மாள் திருவடிகளே சரணம்..சிவமயம்.

௲௮௱௫௰௫ புரட்டாசிமீ˚ உ௰௩௳.

(கு.-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 369-ஆம் நம்பரில் வந்துள்ள நூலுக்கு ஓர் விரிவுரையாகும். இவ்வுரை இன்னாரால் இயற்றப்பெற்றது என்னு மாதியவைகளில் ஒரு செய்தியும் இதிலிருந்து தெரியவில்லை. நடையழகாயிருக்கிறது. இது இதன் மூலத்துடன் யாழ்ப்பாணம் கந்தைய பிள்ளையவர்களால் அச்சிடப்பெற்றுளதாமாயினும் இதற்கும் அதற்கும் மிக வேறுபாடு காணப்படுகிறது. அச்சுப்பிரதியிலே (௩௱உ௰க) 321 பாடல்களே காணப்படுகின்றன. இப்பிரதியில் 337 பாடல்கள் காணப்படுகின்றன. இன்னும் அதில் இல்லாத புதிய செய்யுட்களும் உள. இறுதியில் இந்நூலின் சிறப்புப்பாயிரச் செய்யுட்களில் சில காணப்படுகின்றன. முதலிற் காணப்பெறும் 'தத்துவப்பிரகாசர்', விஷயமான இரண்டு செய்யுட்களும் அச்சுப்பிரதியிற் காணப்பெறவில்லை. ஏடுகளெல்லாம் மிகவும் சிதலுற்றும் சிதைந்தும் உள. பிழைகள் உள.

R. Nos. 1227 to 1230 [One bundle].

Palm-leaf. 7½ × 1¾ inches. Foll. 203. Lines, 8 and 9 on a page. Tamil. Injured. Old. Extent. 2,380 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

R. No. 1227.

திருச்செந்தூர்த்தலபுராணம் (ஜயந்திபுர மாகாத்மியம்) by வென்றிமாலைக் கவிராயர்.

TIRUCCENTŪRTTALAPURĀṆAM (JAYANTĪPURAMĀHĀTMIYAM) by VENṞIMĀLAIKKAVIRĀYAR.

Foll. 1—166.

Complete.

Same work as that described under No. D. 586.

End :

மயில் வாழி தரை சேவல் வாழி
மறுவனையதிரிசுதந்திரத்தர் வாழி
குயில்வாழு மொழித்தெய்வயானை வாழி
குறவர்குலக்கொடிவாழி கொடுஞ்சூர்மாய்த்த
வயில் வாழி செயந்திபுரத்துற்றோர் வாழி
யாறுமுகப்பெருமான்றன் கருணை வாழி
பயில் வானமை முகில் வாழி புராணங் கேட்போர்
படிப்போர்கள் இளகளெல்லாம் வாழி மாதோ. (௱௪)

Colophon :

பதினெட்டாவது சுகப்பிரம்ம ருஷி சுவாமியைப் பூசைப்பண்ணின அத்தியாயம் முற்றும். ஆக அத்தியாயம் ' பதினெட்டு (௰௮)-க்கு திரு விருத்தம் (அ௱௯௰௮) (898) ஆக ௰௨௲? சித்திரைமீ ௨௨ சௌமிய வாரம் புனர்ப்பூச நட்சத்திரத்தில் எழுதி முற்றியது. திருப்புகழ் வீர வாகு போற்றித்துவரைந்தது ?

சந்தஞ்சல சண்முக குருதேசிகன் திருவடியே கதி.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 586-ஆம் நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலும் இந்நூலின் பதினெட்டு அத்தியாயங்களும் உள. இது அச்சிடப்பெற்றுளது. நூலாசிரியர் 'வென்றிமாலைக் கவிராயர்' என்பவராவார். இதற்குச் "சயந்தீபுர மாகாத்மியம்", என்ற மற்றொரு பெயரும் உளதென்று தெரிகிறது. சயந்தீபுரமென்றது திருச்செந்தூரை யென்க ; இப்பெயர் வடமொழியில் இதற்கு வழங்கப்படுமாதலின். ஏடுகளெல்லாம் புழுக்களான் மிக வரிக்கப்பெற்றுச் சிதைந்து கிடக்கின்றன.

R. No. 1228.

ஆறெழுத்தந்தாதி (சடக்கரவந்தாதி) by அகத்தியர்.
ĀṚELUTTANTĀDI by AKATTIYAR.

Foll. 167—187. Extent, 315 granthas.

Complete.

Same work as that described under No. D. 250.

Colophon :

ஆறெழுத்தந்தாதி முற்றும்.
குமார நாயகன் துணை.

திருப்புகழ் வீரவாகு கையெழுத்து.
பன்னிருநயனத் த[மிர்](மு)து துணை.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 250-ஆம் நம்பரில் "சடக்கரவந்தாதி", என்ற பெயரால் வந்த நூலேயாகும். இது முருகக்கடவுளினது ஆறு அட்சரங்களுடைய சிறப்பை யெடுத்து உணர்த்திப் போருகிறது. முற்றும் உளது. இதன் நடுவில் மந்திர பீஜாக்ஷரங்கள் புகுத்தி பாடப்பெற்றுள. ஏடுகள் ஒரு சிறிது புழுக்களால் அரிக்கப்பெற்றுள.

R. No. 1229.

திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா by குமரகுருபரசுவாமிகள்.

TIRUCCENTŪRKKANDAR KALIVEṆPĀ by KUMARAGURU-PARASVĀMIGAḶ.

Foll. 188—203. Extent 180 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 301 but with the additional stanzas as given below :—

Beginning :

திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா.

காப்பு.

தோகைமயில் வாகனனைச் செந்தூரானைச்
சண்முகனைப்பாக்கலிவெண்பாவாய்ப்பாட மாகனகச்
செம்பவளக் கொம்பதரத் தெம்மைவளர்க்குங் கருணைக்
கம்பமதத்தந்திமுகன் காப்பு. (க)

வந்தூர் புளினம் விளங்கிய பொன்மாமதில் சூழ்ச்
செந்தூர்க்கலிவெண்பா செப்புதற்கு—முந்தூ
ரழகு முலைப்பிடி வல்லபையகத்தில் வைத்திருந்த
களபமலர்க்குஞ்சரமே காப்பு. (உ)

சண்முக குருதேசிகன் துணை.

சந்தஞ்சல சண்முக சடக்ஷரசற்குருதேசிகன் திருவடி கதி

Colophon :

கந்தர்கலிவெண்பா முற்றிற்று.

End :

செந்தினகர் குமரகுருபர வேள்மீதிற்
செந்தமிழால் குமரகுருபர மெய்ஞானி
எந்தவுலகுந்துதிக்குங் கலிவெண்பாவாய்
இயம்புமொரு நூற்றிருபத்திரண்டு கண்ணி
மந்திரவுபதேச மெனப் பெற்றோர் கற்றோர்
மாநிலத்தில் சவுபரிபோல் வாழ்ந்து மேலும்
சந்ததமுஞ்சிவஞானந் தழைத்து வெள்ளிச்
சைலகிரிவாழ்வரிது சத்தியந்தானே.

திருப்புகழ் வீரவாகு கையெழுத்து நன்றாக. சண்முகன் கதி.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 301-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் முற்றும் உளது. முன்னும் பின்னுமாக இங்குக் காட்டப்பெற்ற செய்யுட்கள் ஷெ பிரதியிலும், அச்சிட்ட பிரதியிலுங் காணப்பெறவில்லை. ஏடுகள் சிதலுற்றுள. எழுத்துப்பிழையுடன் உளது.

R. No. 1230.

திருச்செந்தூரகவல் by சிற்றம்பல நாடிகள்.

TIRUCCENTŪRAKAVAL BY CIṞṞAMBALANĀḌIGAḶ.

Foll. 205—206. Extent 10 granthas. Printed.

Incomplete.

A Eulogy on God Subrahmaṇya of Tiruccendūr written in a kind of composition, called the *Akavaṟpā*. The name of the author is Ciṟṟambalanāḍigaḷ.

Beginning :

திருச்செந்தூர் அகவல்.

காப்பு.

கொந்தூர்க் கடம்பலங்கற் கோமான்பதம் போற்றிச்
செந்தூர்த் திருவகவற் செப்புதற்கு—முந்தூர்
அழகு முலேப்பிடி வல்லையகத்தில் வைத்திருந்த
களப மலர்க் குஞ்சரமே காப்பு. (க)

அம்மா திருச்செந்தூர் அம்மானருணேக்கிச்
சும்மாவிருக்கச் சுகம். (உ)

சரவணபவன் இருசரணம் போற்றுவாம்.

நூல்.

ஓமெனுந் தாரக வொன்பொருள் சிவனுக்
காமென மொழிந்தவருட் குருவாணேன்
பொற்புறுபொதிய வெற்புறு முனிக்கு
நற்பொருள் விளக்கும் ஞானதேசிகன்
பொய்வழிச்சமணப்புலே யிருணீக்கிச்
சைவம் வளர்க்குஞ்சம்பந்தமூர்த்தி

* * * *
* * * *

End :

நந்தூரலேவாய்ச் செந்தூர்க்கடவுள்
மாவினன் விளங்கு மாவினன் குடியோன்.

(கு.-பு.)—

இந்நூல் திருச்செந்தூரிலே கோயிற் கொண்டிருக்கும் முருகக் கடவுளின்மீது அகவல் ரூபமாய் அமைந்ததொரு தோத்திரப்பிரபந்தமாகும். " சிற்றம்பல நாடிகள் ", என்னும் பெரியாரால் இயற்றப்பெற்றதாம். அச்சிடப்பெற்று உளது. இதில் முதலிலிருந்து (21) இருபத்தோரடிகளே உள.

R. No. 1231.

Palm-leaf. 18 × 1¼ inches. Foll. 187. Lines, 7 and 9 on a page. Tamil. Injured. Old. Extent 2,280 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

நன்னூல் காண்டிகை உரை by மயிலைநாதர்.
NANNŪL KĀṆḌIKAI URAI by MAYILAINĀTHAR.

Complete.

Same work as that described under No. D. 66 which does not contain this portion.

Beginning :

நன்னூல் காண்டிகை உரை.

எண்ணிய வெண்ணிய வெய்துபகண்ணுதற்—
பவள மால்வரை பயந்த
கவளயானையின கழல் பணிவோரே. (உ)

பாயிரம் :—

மலர்தலையுலகின் மல்கிருளகல
இலகொளிபரப்பி யாவையும் விளக்கும்
பருதியினொரு தானாகி முதலீ
றொப்பளவாசை முனி விகந்துயர்ந்து
அற்புதமூர்த்தி தன்னலர் தருதன்மையின்
மனவிருளிரிய மாண்பொருள் முழுது
முனிவறவருளிய மூவறு மொழியுளுங்
குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான்கெல்லையினிருந்தமிழ்க்கடலின்
அரும்பொருளைந்தையுமியாவையு முணரத்
தொகைவகை விரிவிற்றருகெனத்துன்னார்
இகலற நூறி யிருநில முழுதுந்
தனதெனக் கோலித் தன் மதவாரணந்
திசைதொறு நிறுவிய திறலுறு தொல்சீர்க்
கருங்கழல் வெண்குடைக் கார் நிகர்வண்கைத்
திருந்திய செங்கோற் சீயகங்கன்
அருங்கலை விநோதன் அமராபரணன்
மொழிந்தனனாக முன்னோர் நூலின்
வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்
பொன் மதிற்சனகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி
என்னு நாமத்திருந்தவத்தோனே.

என்பது பாயிரம்.

இதன் பொருள் மேற்சொல்லுதும். (க)

சூத்திரம் :—

முகவுரை பதிகமணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம். || உ ||

என்பது, இவையனைத்தும் பாயிரத்துக்குக் காரணப் பெயராகும் என்றவாறு. || உ ||

பாயிரம் பொதுசிறப்பென விருபாற்றே. || ௩ ||

என்பது, மேற்சொன்னபாயிரம் பொதுப்பாயிரமுஞ் சிறப்புப்பாயிரமும் என இருவகைப்படும். என்றவாறு.

அவற்றுள் பொதுப்பாயிரமாவது எல்லா நூன்முகத்தும் உரைக்கப் படுவதெனக்கொள்க. சிறப்புப்பாயிரம் ஒரு நூன்முகத்து உரைக்கப் படுவது. || ௩ ||

End :

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல காலவகையினானே || சகக ||

என்பது, என்னுதலிற்றோவெனின், இந்நூலிற்சொன்ன ஐந்ததிகாரத் திற்கும் சிங்கநோக்காய் நிற்பதொரு புறனடையுணர்த்திற்று.

இ—ள் :—

முற்காலத்துள்ளன சில விடுத்தலும், இக்காலத்துச் சில வருவித்தலும், காலக் கூறுபாடு நோக்கக் குன்றக் கூறன் மிகைபடக் கூறல் என்னுங் குற்ற மாகா என்றவாறு.

உ-ம்—அவை, அழன், புழன், கேட்டை யென்று நின்றையென்று கண்டீ ரென்று என்றற் றொடக்கத்தன இக்காலத்து ஈண்டு வழங்காது. அங்ஙனம் இங்ஙனம் உங்ஙனம் எங்ஙனம் என்புழிங்ஙவ்வும், சரடு, சரி சளி, சமழ்ப்பு சள்ளை என்புழி சகரமும் இக்காலத்து ஈண்டு மொழிக்கு முதலாயின வென்க. பிறவும் அன்ன. இவ்வாறே மேல்வரும் அதி காரங்களினுங் கண்டுகொள்க. (உக)

ஐந்தாவது உரிச் சொல்லியன்
முற்றும்.

இருதிணை மூவிட நான்மொழி யைம்பால் அறுதொகையேழ்
வருவழு வெட்டுரு பொன்பா(தா)ந் தொகாநிலை யாய்ந்தவெச்சம்
ஒருபது கோளெட்டு முப்பொழு தீரிட மீரியல்பாய்
வருமொழி மூன்று முணரச் சொல்வண்மை வருந்திருவே. || க ||

பேராறுபத் தொன்று வினைமுப்பத் திரண்டு பொது
வோராறுபத் தெட்டிடையின மூவேழின்—மேலொன்று
உரியிருபத் தொன்றுகச் சொற்சூத்திரத்தின்
விரியிரு நூற்றோரிண்டாய் வேண்டு. || உ ||

நன்னூல் எழுத்தும் சொல்லுமாக இருவகை
காண்டிகையும் ஒருவகையான் முற்றும்.
ஓராதெழு தினேனுயினு மொண்ண பொருளை
ஆராய்ந்து கொள்க வறிவுடையோர்—சீராகக்
குற்றங்களை ந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

வியஞு ஐப்பசிமீ உ௰அ௨ சனிக்கிழமை இப்படிப்பட்ட சுபதினத்தில் நன்னூல் எழுதி முடிந்தது. முற்றும்.

(கு.-பு.)—

இந்நூல் நன்னூலுக்கு ஓர் விரிவுரையாகும். மயிலைநாதரால் இயற்றப் பட்டது. அச்சிடப் பெற்றிருக்கிறது. இது பழய உரை, பழைய காண்டிகை உரை என்ற பல பெயர்களால் வழங்கப் பெறும். இப்பிரதியில் எழுத் ததிகாரம், சொல்லதிகாரம் என்ற விரு பகுதியும் உள. ஏடுகள் சிதலுற்று உள. அச்சுப் பிரதிக்கும் இதற்கும் பல பேதங்கள் காணப்படுகின்றன.

R. No. 1232.

Palm-leaf. 13 × 1¾ inches. Foll. 218. Lines 10 on a page. Tamil. Injured. Old. Extent 4,360 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

இருசமயவிளக்கம் by அரிதாதர்.
IRUŚAMAYAVIḶAKKAM by ARITĀTAR.

Complete.

An explanation of the doctrines of the two religions, viz., *Śaivism* and *Vaiṣṇavism.*

Beginning :

இரு சமய விளக்கம்.

அலையிட்ட நீரையடக்கும் வடவானலம் போற்
தலையிட்டு வாதுமுயல் சாக்கியர் தம்மைவென்று
மலையிட்ட தீபமெனமால் சமயத்தை மண்மேல்
நிலையிட்ட பூதூர் யதிராசனை நெஞ்சில் வைப்பாம். || க ||

கமழ்கின்ற வாசவகுளச் செழுங் கண்ணியந்தேன்
உமிழ்கின்ற திண்டோளாசைப் பவவோத நீர்க்குள்
அமிழ்கின்ற வென்னைக் கரையேற்று தற்காகவேதந்
தமிழ்செய்த ஞானக்குரு கூரனைத்தாடுதிப்பாம். || உ ||

நாலு முகமாய் நவில்வாணி யென்நாவின்மேவ
மாலுர் நயனங்கவர் பொற்பன் மாக்கணங்க
ளாலுதகரத்துள் வேத்திரத் தையர் தெய்வச்
சேனுபதிச் செம்மலர்த் தாளிணை சென்னிவைப்பாம். || ங ||

நீரேற்ற பாரினுயரா துறுநீடு ஞானக்
கூரேற்ற சிந்தையதிராசர் குலத்துளானைப்
போரேற்று நாயன்றனை வாழ்பெரும் பூதூரானைச்
சீரேற்ற செல்வக் குரு ராயனைச் சிந்தைசெய்வாம். || ௪ ||

* * * *

கிரிபோல் விளங்கிக் கிளர்க்கும்புயக் கிருட்டிணராயன்
தரைமீது சிங்காத்திரியிற் செயத்தம்பம் நாட்ட
வரமாதர வாலளித்தே வடகூவ மேவுங்
கருமாமணி வண்ணனைநீடு கருத்தில் வைப்பாம். || ௬ ||

விரிதா தணியுந் தொடை மேவிய வேந்தனுனை
வரிதா தனிலைத்தெலா முடித்தாண்ட கோவைத்
தெரிதா தர்வேதகிரித்தடச் செங்கண்மாலைப்
பெரிதா தரிப்பார்க் கரிதோ பிறவாத பேறே. || ௭ ||

கடவுள் வாழ்த்து முற்றும்.

பாயிரம் : அவையடக்கம்.

வன்பாய்ச்சல் பாயப்பதுங்கும் வரிவேங்கை பொங்கி
மென்பாய்ச்ச லின்றியறியாது வெள்ளா டடக்க
நன்பாக்கள் வல்லோர் நவின்றுரைது நானிலத்துப்
புன்பாக்கரு துந்தமி யேன்புகலா தொழிந்தேன். || ௧ ||

அவையடக்கம் முற்றும்.

பூண்கின்ற பணுடவியா லொளிர்பூத நாதன்
சேண்கொண் டலைநேர் திருமேனியந் தேவனென்ன
மாண்கொண் டவருட்பரவத் துவை வண்மையாகக்
காண்கின் றதுவே தமியன்றன் கருத்துமாதோ. || ௨ ||

சதுர்வேதமு மாகமமுங் கொடு சார்ங்கபாணி
விதுவேணிய னென்னும் மூர்த்திகண் மேன்மைநோக்கிற்
கதுவேழ்கடல் சூழுலகத் தவர்கட் கெல்லா மங்
கதுவே யதுவே பரமாய் வியப்பாகையாலே. || ௩ ||

ஏராரண மாகம நீடி திகாசமாதி
சார்வாகிய நூல் பொதுநூல் கொடு தத்துவத்தை
யாராயு மிடத்தான மால்புக ழுங்குரைக்குஞ்
சீரான மொழிக்கெதி ருத்தரஞ் செப்பவேண்டி. || ௪ ||

திரமாகிய வாகமமே யொரு செய்யமாது
மருமாமறை மற்றொரு தோகையுமாக நாட்டி
யொருமாதுறை பாகனை மாலையுகந்து போற்று
மிருமாசமயத்து விளக்க மியம்பலுற்றேன். || ௫ ||

ஒருதேவதை யேயுலகுக் குயர்நாத னென்ன
வருமாமறை நிச்சயித் தோதியமைத் திருக்க
விருமா சமயத்து விளக்க மென்றிந்தநூற்குத்
திரமாகிய பேர்வரு காரணஞ் செப்பவேண்டில். || ௬

திரமுந்திய விப்பெரு நூலிற் செகந்தனக்குப்
பிரமங் களிரண்டுள வென்று பிறித்ததில்லை
இருமை சிவன்மால் சமயங் களையின்ன
வினன தாமென்று விளக்கிய தாதலிற் றக்கதாமே. || எ ||

End :

மிக[மின்னு](விந்நூல்)போற்றெய்வீகம் விளைந்த நூல்கள்வேறில்லை
தொகைமன்னியவிப் பெருநூலிற் சொன்ன பரமார்த்தந்தன்னி
லிகலொன்றின்றி நிறைவேற வெவருட்பட்டா ரவர்தாமே
நிகரின்றியே பூதலமீது நீடுஞ் சருவ[க்கின](ஞ்ஞ)ராவார். || ௯௰௬ ||

அரிதைப்பதிவா ழரிதாத னருமாமறையைத் தமிழ்செய்து
விரிவற்றுரைத்த விருசமய விளக்கநூலின் பரமார்த்தம்
பிரிவுற்றுணர் வாரதுகேட்பார் படிப்பார் பாராட்டுதற்செய்வா
ரிருமைப்பய னென்றுரைக் கின்றவிகமும் பரமும்பெறுவாரே.
|| ௯௰௭ ||

சம்மதப்படலம் முற்றும் || ஆக, உ௲௱௰ ||

வாழித்திருநாமம்.

மனத்தகத்தெமையாளவந்து
நூற்றெண்பதிகள்வாழ் திருமுகுந்தன் வாழி
மலர்மகண் முதற்றேவிமார் அநந்தன்
கருடன் வளர் சேனைமன்னன் முதலாம்
வினைத்தொகையறுக்கு நித்திய சூரியர்
வாழிநால்வேதந்தமிழ்ப்படுத்தி
மேதினியையுய்வித்தமாறர் முதலாழ்வார்கள்
மெய்ப்பதி (ன்) மரிருவர் வாழி
கனத்தவிசை நாதமுனி முதல் மகாபூரண
ரெதிகட்கிறைவர் வரவரமுனி
கருதுநங்குரவர் வரையாரியர்கள் வாழி
பாகவதரரிதாதர் வாழி
எனத்துதிசெய்தீற்றவர் சொல்லிரு சமய
நூற் பொருளினைத்தெரித்துணர்வை
நல்குமிவ்வடிவழகிய நம்பி பரமகுருசாமி
யவ்வினத்தோடெம்முடன் வாழியே. || க ||
முற்றும்.

ஆகப்படலம் || அ௰ || க்குக்கவிகள் உ௲௱௰௧ முன்தனியன் (ச) ஆகக் கவிகள் || உ௲௱௰௫ ||.

௲அ௱௯௰உ ௵ (1832)௵ பிப்ரவரிமீ (௰அ) 18-ம௳க்கு சரியான ௲எ௵ கர௵ மாசிமீ அ௳ மந்தவாரமும் அமரபட்சத்து த்விதீயை நாழிகை இ . . க்குமேல் திருதீயை நாழிகை ௫௰௬ உத்திர நட்சத்திரம் நாழிகை ௯௰௧ இ .

* * * *
* * * *

இந்தச் சுபதினத்தில் விடிந்து நாழிகை ச இல் சிதம்பரம் புவன கிரிபட்டணத்தில் தெக்குத்திட்டையிலிருக்கும்? திருநெல்வேலி சுந்தரத் தோன் பிள்ளை தெரு இலட்சுமணப் பிள்ளையவர்கள் குமாரர் நாராயண பிள்ளையவர்கட்கு நாகலாபுரம் திருநெல்வேலி ஷை தெரு வீரவாகு பிள்ளையவர்கள் குமாரன் சூரியநாராயணன் கையினால் தனித்தகை யெழு[த்து](திக்கொடுத்தது)

ஸ்ரீ ராமஜயம்

(கு.-பு.)—

இந்நூல் சைவ வைணவ சமயங்களுக்குள்ள பேதங்களையும் அவை யிற்றிற்கூறிய சித்தாந்தங்களையும் அவ்விரண்டிலும் வரும் சில தடை கட்கு உரிய விடைகளையும் இன்னும் இன்னோரன்ன பலவற்றையும் பல் வேறு புராணங்களிலுள்ள கதைகளைக்கொண்டே யெடுத்து விளக்கி இறுதி யில் திருமாலுக்கே பரத்துவம் உண்டென்றும் உணர்த்திப்போருகிறது. இது தென்கலை சம்பிரதாயத்தில் உள்ள அரிதாதர் என்ற பெரும்புலவரால் இயற்றப்பெற்றதென்று தெரிகிறது. வடமொழியில் கூரேச விஜயத்தைப் போல் தமிழிலும் இஃதாமெனக்கொள்ளக்கிடக்கிறது.

R. No. 1233.

Palm-leaf. 17 × 1¾ inches. Foll. 84. Lines, 12 on a page. Tamil. Injured. Old. Extent 3,872 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

கோயிற்புராணம் by உமாபதிசிவாசாரியார்.

KŌYIṞPURĀṆAM by UMĀPATIŚIVĀCĀRIYĀR.

Complete.

Same work as that described under No. D. 571.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 571-ஆம் நம்பரில் வந்துள்ள பிரதி யேயாம். இதில் இந்நூல் முற்றும் உளது. ஏடுகள் முற்றும் சிதலுற்றுச் சிதைந்துள.

R. No. 1234.

Palm-leaf. 17½ × 1¾ inches. Foll. 136. Lines, 10 on a page. Tamil. Much injured. Old. Extent 5,440 granthas. Printed.

Purchased in 1938–39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

வில்லிப்புத்தூரார்ப் பாரதம் by வில்லிப்புத்தூரார்.

VILLIPPUTTŪRĀR BHĀRATAM by VILLIPPUTTŪRĀR.

Incomplete. Breaks off in the 44th stanza of Kiruṣṇantūtūccarukkam.

Same work as that described under No. D. 527.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 527 ஆம் நம்பரில் வந்துள்ள பிரதி யேயாம். இப்பிரதியில் ஆதி தொடங்கி உத்தியோக பருவத்துக் கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 44 ஆம் செய்யுளோடு முடிவடைகின்றது. ஆதலின் முற்றுமில்லை. ஏடுகள் முற்றும் சிதலுற்றுச் சிதைந்துள.

R. Nos. 1235 and 1236 (One bundle).

Palm-leaf. 13 × 1¾ inches. Foll. 279. Lines, 10 on a page. Tamil. Slightly injured. Old. Extent 8,368 granthas.

Purchased in 1938-39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

R. No. 1235

திருச்சிற்றம்பலக்கோவையார். பேராசிரியர் உரையுடன் by மாணிக்கவாசகர்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR WITH THE COMMENTARY OF PĒRĀŚIRIYAR by MĀṆIKKAVĀCAKAR.

Foll. 1—256. Extent, 7680 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 1169.

Colophon :—*திருச்சிற்றம்பலக்கோவையார் எழுதி முடிந்தது.*

சுப்பிரம்மணியம். தருஹு விரோதி ஹு ஆனிமீ உயகஉ குரு வாரமும், புநர்ப்பூசமும், நவமியும், பூர்வபட்சமும் கூடிய சுபதினத்தில் புவனகிரிப்பட்டணத்திலிருக்கும் தெற்குத் திட்டை இலட்சுமணப் பிள்ளை யவர்கள் குமாரர் நாராயணப் பிள்ளையவர்களுக்கு நாகலாபுரத்திலிருந்து திருநெல்வேலி சுந்தரத்தோள் பிள்ளை தெரு வீரவாகு பிள்ளை குமாரன் சூரியநாராயணன் எழுதிக்கொடுத்தது.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1169 ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இதில் இந்நூல் உரையுடன் முற்றும் உளது. ஏடுகள் சிதலுற்று உள.

R. No. 1236.

திருமுருகாற்றுப்படை, நச்சினார்க்கினியர் உரையுடன் by நக்கீரனார்.

TIRUMURUKĀṞṞUPPAḌAI WITH THE COMMENTARY OF NACCINĀRKKINIYAR BY NAKKĪRANĀR.

Foll. 257—279. Extent 688 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 1200.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1200-ஆம் நம்பரில் வந்துள்ள பிரதியேயாகும். முற்றும் உளது. ஏடுகள் சிறிது புழுக்களால் அரிக்கப் பட்டுள.

R. Nos. 1237 and 1238 (Ooe bundle).

Palm-leaf. 12¾ × 1¾ inches. Foll. 286. Lines 9—12 on a page. Tamil. Injured. Old. Extent 7,560 granthas.

Purchased in 1938-39 from Sri Muttukkumārasvāmi Ōduvāmūrtti, Tinnevelly Town.

R. No. 1237

திருக்குறள், பரிமேலழகர் உரையுடன் by திருவள்ளுவ நாயனார்.

TIRUKKUṞAḶ WITH THE COMMENTARY OF PARIMĒLAḶAKAR by TIRUVAḶḶUVANĀYANĀR.

Foll. 1—252. Extent 7,160 granthas. Printed.

Complete.

Same work as that described under No. D. 151.

Colophon :—திருவள்ளுவர் உரை முற்றும்

கூடுய௱ஸுல செயஸுல மாசிமீ ௰கஉ ஞாயிறு உதிச்சு ௰உ நா[ளி](ழி) கையில் இருஷப லக்னத்தில் ஆசாரியரையும் திருக்கோவிலையும், திருவேடத்தையும் மிகவும் வழிபட வென்றும் நாயடியேனை இகபரமிரண்டினு மாள்வதற்கு மெழுந்தருளிய மகாராசர் சிவ சூரியநாராயண பிள்ளையவர்களுக்குக் கிளா[ளா]ங்காட்டிலிருக்கும் பூவுப்பிள்ளை வாத்தியான் திருவள்ளுவர் நாயனார் உரை பாடம் எழுதி முடித்தேன்

* * * *

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 151-ஆம் நம்பரில் வந்துள்ள பிரதியேயாகும் இது உரையுடன் முற்றும் உளது. ஏடுகள் சிதலுற்றுக்கிடக்கின்றன.

R. No. 1238.

திருப்பிரமபுரயமகவுரை.

TIRUPPIRAMAPURA YAMAKAVURAI.

Foll. 253—286. Extent 400 granthas. Not printed.

Incomplete.

A commentary on a poem, in the *Yamakam* style, in praise of God Śiva enshrined at Tiruppiramapuram.

Beginning :

திருப்பிரமபுர யமக உரை

உற்றுமை சேர்வது மெய்யினையே=என்பது, உமாபரமேசுவரியானவள் பொருந்தி சேர்ந்து வாழ்வது நின்னது திருமேனியையே ; உணர்வது நின்னருள் மெய்யினையே=என்பது, யான் உணர்ந்துகொண்டிருப்பது நினது சிவஞானம் பொருந்திய சத்திய தரிசனத்தையே ; கற்றவர் காய்வது காமனையே=என்பது, உனது சத்திய தரிசனத்தே யலைவறவதுவாக நிற்கக் கற்றவர் விராகபாவத்தாலே விடப்பட்டது முன்பற்றின இல்வாழ்க்கையே ; கனல்வழி காய்வது காமனையே=என்பது, கனல் சேர்ந்திருக்கும் திருநெற்றி விழியினுற் சுடுவது காமனுகிய மன்மதனையே ; அற்றமறைப்பது முன் பணியே=என்பது, உனது நிர்வாணத்தை மறைப்பதும் உனது தொங்கலான பாம்புகளே ; அமரர்கள் செய்வது முன்பணியே=என்பது, தேவர்கள் செய்தொழுகுவதும் நினது குற்றேவலையே ; பெற்றும் உகந்தது கந்தனையே = என்பது, ஈன்றெடுத்து விரும்பி கொண்டது கந்தனுகிய சுப்பிரமணியனையே, பிரமபுரத்தை உகந்தனையே=என்பது, திருப்பிரமபுரம் என்னும் திருப்படை வீட்டை உனக்கிடமாக விரும்பினையே என்றவாறு. (க)

End :

விண்டலர் பொழிலணி வேணுபுரத்தான் = என்பது, விண்டு என்பது அரும்புதலாம், அலர் என்பது கட்டவிழ்தல், பொழில் என்பது சோலை, அணி என்பது சூழ்தல், வேணுபுரத்தான் என்பது அரும்புதலையும், அலர்தலையும் உடைய மலர்ச்சோலை சூழ்ந்த வேணுபுரம் என்னும் திருப்பதிக் கக் கருத்தாவு...ன் என்றவாறு.

(கு.-பு.)—

இது திருப்பிரமபுரம் என்ற திவ்விய தலத்திற் கோயிற் கொண்டிருக்கும் சிவபிரான்மீது துதி ரூபமாய் "யமகம்", என்ற செய்யுள் வகையிலே அந்தாதியாக அமைந்ததொரு பிரபந்த விசேடத்திற்கு விரிவுரையாகும். இயற்றியவர் இன்னுரென்று விளங்கவில்லை. இது முற்றுப்பெறவில்லை. எழுத்துப்பிழையுடன் உளது. ஏடுகள் சிதலுற்றுமிருக்கின்றன.

R. Nos. 1239 and 1240 (One bundle).

Palm-leaf. 11 × 1½ inches. Foll. 146. Lines, 8—10 on a page. Tamil. Condition slightly injured. Old.

Purchased in 1938-39 from Sri Muttukumārasvāmi Ōduvāmūrti, Tinnevelly Town.

R. No. 1239.

நன்னூற்காண்டிகையுரை.

NANNŪṞKĀṆḌIKAIYURAI.

Foll. 1—137. Not printed. Extent 2,540 granthas.

Similar to the work described under R. No. 1231.

Incomplete.

A commentary on the well-known *Nannūl.*

Beginning:

நன்னூல் மூலமும்—காண்டிகை உரையும்.

மலர்தலையுலகின் மல்கிருளகல
விலகொளி பரப்பி யாவையும் விளக்கும்
பருதியினொரு தானாகிமுதலீ
றொப்பளவாசை முனிவிகந்துயர்ந்த.
* * * *

பன்னருஞ்சிறப்பிற் பவணந்தி
யென்று நாமத் திருந்தவத்தோனே (க)

உரை :—

இது, நூல் செய்தவன் பெயர் முதலாகிய பதினொன்றையும் சொல் கின்றது.

இதனது பதப்பொருள் :—மலர் தலையுலகில் = பரந்த இடத்தையுடைய உலகத்தின்கண் ; மல்கிருள் அகல = நிறைந்த இருள்கெட, இல கொளி பரப்பி = விளங்குங்கிரணத்தை விரித்து, யாவையும் விளக்கும் = கண் களுக்குத் தெரியத்தக்க உருவங்களையெல்லாங் காட்டுகின்ற, பருதியின் = சூரியனைபோல, ஒரு தானாகி = உலகங்களுக்கெல்லாந் தான் ஒரு முத லாகி, முதல் + ஈறு, ஒப்பு, அளவு, ஆசை, முனிவு, இகந்து உயர்ந்த = பிறப்பும், இறப்பும், உபமானமும், அளவும், விருப்பமும், வெறுப்பும், ஆகிய இவைகளிற் சுபாவமாக நீங்கி நிற்கையினாலே தலை வனாகிய அற்புதமூர்த்தி = ஞானமே திருமேனியாக உடையவன்
* * * *

